திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

ஜூலை 2020 விலை ரூ.5/-



திருமலையப்ப
ஸ்வாமி
ஆனிவர
ஆஸ்தானம்
16-07-2020

## ஸ்ரீசக்கரத்தாழ்வார் திருநட்சத்திரம்
## 21-07-2020




**ப்ரதிபட ச்ரேணி பீஷண**
**வரகுண ஸ்தோம பூஷண**
**ஜநிபய ஸ்த்தாந தாரண**
**ஜகதவஸ்த்தாந காரண |**

**நிகில துஷ்கர்ம கர்சந**
**நிகம ஸத்தர்ம தர்சந**
**ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந**
**ஜயஜய ஸ்ரீஸுதர்சந ||**

-ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளிய
ஸ்ரீசுதர்சநாஷ்டகம் - 1



*தஸ்ய ஸஞ்ஜநயந்ஹர்ஷம்*
*குருவ்ருத்$_3$த$_4$: பிதாமஹ: |*
*ஸிம்ஹநாத$_3$ம் விநத்$_3$யோச்சை:*
*சங்க$_2$ம் த$_3$த்$_4$மௌ ப்ரதாபவாந் ||*

கௌரவர்களில் முதியவரானவரும் மிக்கப்
பிரதாபமுடையவருமான பாட்டனார் பீஷ்மர்,
துரியோதனனின் உள்ளத்தில் மகிழ்ச்சியை உண்டு
பண்ணுகின்ற வகையில் சிங்க கர்ஜனையைப் போன்று
உரக்கக் கர்ஜித்து சங்கை முழக்கினார்

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–12*



*வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப் பூர*
*மேன்மேலு மிகவிளங்க விட்டு சித்தன்*
*றூயதிரு மகளாய்வந் தரங்க னார்க்குத்*
*துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே*
*நேயமுடன் றிருப்பாவைப் பாட்டா றைந்து*
*நீயுரைத்த தையொருதிங் கட்பா மாலை*
*யாயபுகழ் நூறுடனாற் பத்து மூன்று*
*மன்புடனே யடியேனுக் கருள்செய் நீயே.*



வேயர்குலத்தினருக்கு உரியதும், புகழையுடையதுமான,
ஸ்ரீவில்லிபுத்தூரில், திருவாடிப்பூரத் திருநக்ஷத்ரம், மேன்மேலும் மிகப்
பெருமை பெற்று விளங்கும்படி, பெரியாழ்வாருடைய பரிசுத்தையான
புதல்வியாய் அவதரித்து, ஸ்ரீரங்கமன்னார்க்கு திருத்துழாய்
மாலையை தன் முடியில் சூடிக்கொடுத்த கோதைப் பிராட்டியே!
அரங்கனிடம் காதலுடன் நீ அருளிச் செய்த திருப்பாவைப் பாசுரங்கள்
முப்பதையும், தையொருதிங்களும் என்று தொடங்கிய
பாமாலையாகிய புகழையுடைய நூற்று நாற்பத்துமூன்று
பாசுரங்களையும் அன்போடு நீ தாஸனான எனக்கு அருள்புரிவாயாக

*- பிரபந்தசாரம்*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி.தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943-ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

### திட்டத்தின் நோக்கங்கள் :

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

### ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.




மலர் 51 இதழ் 02

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| குரு வணக்கம் கோடி நன்மை தரும் - நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். | 7 |
| ஸ்ரீசுதர்ஸனர் - திருமதி பிரேமா வரதன், புதுதில்லி. | 10 |
| கோடி பலன் தரும் ஆடி - புலவர் க.சுகுமாரன், மன்னார்குடி. | 13 |
| கருட விரத வழிபாடு - திரு.ஆர்.வி. பழனி, புதுச்சேரி. | 16 |
| திருவாடிப்பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே - திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர். | 18 |
| ஸ்ரீநாகராஜ வழிபாடு - திரு. ப. சரவணன், கும்பகோணம். | 21 |
| திருவேங்கடவன் திருவருள் ஸ்ரீமந்நாதமுனிகள் திருஅவதாரம் - திரு. எம்.எஸ். வேங்கடாசாரியர், காட்டுமன்னார்கோவில். | 22 |
| தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன் - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 25 |
| வரங்களை வாரி வழங்கும் வரலக்ஷ்மி தேவி - திருமதி பா. காயத்ரி, கேரளா. | 31 |
| திருவேங்கடவன் திருப்பள்ளியெழுச்சி - உ.வே. கே.பி. தேவராஜன் ஸ்வாமி, சென்னை. | 33 |
| துளசியின் மகிமை - பாப்பான்குளம் பெ.பிச்சையா, சென்னை. | 36 |
| அன்னமய்யா வாழ்க்கை வரலாறு - திருமதி ராதாராமநாதன், திருப்பதி. | 38 |
| அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : முதல் நாள் நடப்பதே நிச்சயதார்த்தம் - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 40 |
| ஸ்ரீமத்பாகவத கதை சாகரம் – பிரகலாதனின் சிறந்த குணங்கள் - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | 42 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 44 |
| 108 திவ்யதேச வைபவம் – திருத்தொலைவில்லிமங்கலம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 47 |
| பகவத் கீதை–இளைய சமுதாயம் – உடல் தவமே வெற்றியின் முதல் படி - திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா. | 50 |
| ஆயுர்வேதம்–தனியா - முனைவர் பா. தனஞ்செழியன், சென்னை. | 52 |
| இராசிபலன்–ஜூலை 2020 -திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 54 |


## அட்டைப்பட விளக்கம்

**முன்னட்டை :** திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம் (திருமலை).

**பின்னட்டை :** திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம் (திருமலை).

சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
**பேராசிரியர் K. ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் : Dr. V.G.**சொக்கலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**

***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

**நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.-பிரதான ஆசிரியர்

உங்களுடன்...



# ஆடியே வருக! ஆனந்தம் தருக!!

ஒரு வருடத்தில் வரும் எல்லா மாதங்களும் சிறப்பு வாய்ந்த மாதங்களே. ஆயினும் ஆடி மாதத்திற்கு மட்டும் தனிச்சிறப்பு உண்டு. இம்மாதத்தில் தான் சூரிய பகவான் வடதிசையிலிருந்து தென் திசையை நோக்கி பயணத்தைத் தொடங்குகிறார். அதுமட்டுமின்றி பண்டிகைகளும் இம்மாதத்திலிருந்துதான் ஆரம்பமாகின்றன. குறிப்பாக இம்மாதத்தில் நாக சதுர்த்தி, கருட பஞ்சமி, துளசி மஹாத்மியம் மேலும், விரதம் இருந்து வழிபாடு செய்ய வேண்டிய முக்கியமான நாட்களும் வருகின்றன.

இம்மாதத்தில்தான் கோடைக்காலம் முடிந்து பருவமழை துவங்கி ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி புது நீர் பாயும். ***"நீரின்றி அமையாது உலகு"*** என்பது வள்ளுவன் வாக்கு. விவசாயிகளும் இம்மாதத்தில்தான் விதை விதைத்து பின்பு நாற்று நடுவர். இவ்வாறு விவசாயத்திற்கு உதவும் நீருக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மக்கள் பல விதமான அன்னப்பிரசாதங்களை நிவேதனமாகப் படைத்து ஆடிப்பெருக்கு பண்டிகையாகக் கொண்டாடுவர். அன்றைய தினம் சுமங்கலிப் பெண்கள் தாலிக்கயிற்றை மாற்றியும், திருமணம் ஆகாதப் பெண்கள் நல்ல கணவன் கிடைக்க வேண்டியும் அம்மனுக்கு படையல் வைத்து வழிபடுவர்.

ஆடிப்பெருக்கு தினத்தன்று தன் தங்கையான காவிரிக்கு ஶ்ரீரங்கம் நம்பெருமாள் சீர் வரிசைப் பொருட்களை யானை மீது வைத்து அம்மா மண்டபப்படித்துறைக்கு வருவார். காலையில் படித்துறையில் நம்பெருமாளுக்கு திருமஞ்சனம் நடைபெற, மாலை வரை அங்கேயே வீற்றிருந்து தான் கொண்டு வந்த சீர்வரிசைப் பொருட்களை தன் சகோதரியான காவிரிக்கு சமர்ப்பணம் செய்வார்.

ஆடி மாதத்தில் பூர நட்சத்திரம் தான் ***"அரங்கனுக்கே ஆட்படுவேன்"*** என்று கூறிய ஆண்டாள் அவதரித்த நன்னாளாகும். இந்த ஆடிப் பூரத்தன்றுதான் அம்மன் ஆலயங்களில் அம்மனுக்கு வளைகாப்பு செய்வர். இந்நன்னாளில் அம்மனை வழிபட்டு ஆலயத்தில் வழங்கப்படும் வளையல் பிரசாதத்தைப் பெறுவதால் கன்னிப் பெண்களுக்கு நல்ல வாழ்க்கை அமையும். குழந்தையில்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியமும், வீட்டில் செல்வ வளமும் பெருகும் என்பது காலம்காலமாக உள்ள நம்பிக்கையாகும்.

இம்மாதத்தில் பெண்களால் கொண்டாடப்படும் மற்றொரு முக்கியமான நாள் வரலக்ஷ்மி விரதமாகும். அன்பு, புகழ், அமைதி, இன்பம், வலிமை இவையாவும் வரலக்ஷ்மியின் அம்சங்களாகும். இவையாவும் பெற ஒரு கலசத்தில் வரலக்ஷ்மியை ஆவாஹணம் செய்து, கணவனின் நலனைக் கருதியும், வீட்டில் என்றும் சுபிட்சம் நிலவவும் இவ் விரதத்தினை பெண்கள் கடைபிடிக்கின்றனர். நம்மாழ்வாரும் ***"வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே"*** அதாவது பரிமளம் மாறாத தாமரை மலரிலே நித்திய வாசம் பண்ணுகின்ற பிராட்டி எல்லா பாபங்களையும் போக்கி யருள்வாள் என்கிறார்.

ஆடி மாதத்தின் முதல் நாளில் தான் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானுக்கு ஆனிவர ஆஸ்தானம் (ஆடிப் பூஜை) நிகழ்த்தப்படுகிறது. அன்றைய தினம் திருவேங்கடமுடையான் முன்னிலையில் வரவு செலவு கணக்குகளை வாசித்து, மீண்டும் அன்றைய தினத்திலிருந்து புதிய கணக்குகளைத் துவக்குவர்.

இவ்வாறாக மாதங்களில் மகிமை வாய்ந்த ஆடியில் நதிகளில் புனித நீராடி இறைவனைத் துதித்து நற்பலன் பெறுவோமாக.

குருவே சரணம்

# குரு வணக்கம் கோடி நன்மைதரும்

மாதா பிதா குரு தெய்வம் என்பது முன்னோர் வாக்கு. நம்மை உலகிற்குக் காட்டிய தாயும், உலகை நமக்குக் காட்டிய தந்தையும், உலக நடைமுறையை நமக்கு போதித்த ஆசானும் தெய்வத்திற்கு சமமானவர்கள் என்பது இதன் பொருள். இதையே மாதா, பிதா, குரு மூவரும் தெய்வத்தைவிட மேலானவர்கள் என மற்றொரு விதமாகவும் பொருள் கொள்ளலாம். இத்தகைய குருவுக்கு மரியாதை செய்யும் நாளே குருபூர்ணிமா தினமாகும். இந்நாளில் நம் உயர்வுக்கு வழிகோலிய குருவை வணங்கி பணிவது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

திதிகளில் பௌர்ணமி திதி தனித்துவமிக்கது. ஆஷாட மாத பௌர்ணமி குரு பௌர்ணமியாகும். இந்நாளில் நமக்கு கல்வி கற்றுத் தந்த ஆசிரியர் பெருமக்களை சந்தித்து மரியாதை செய்து, அவர்களது ஆசியைப் பெறவேண்டும். ஒவ்வொருவருக்கும் அவரைக்கவர்ந்த அல்லது முன்னேற்றத்திற்கு தூண்டுகோளாக இருந்த ஆசிரியர்கள் இருப்பார்கள்.

ஆனால் படித்தவர், படிக்காதவர், பணக்காரர், ஏழை என இந்து மதத்தினர் அனைவருக்கும் ஒரு ஆசிரியர் இருக்கிறார் என்றால் அவர்தான் வேதவியாசர். இவர் வேதங்களை வகைப்படுத்திய வர். மகாபாரதத்தை எழுதியவர். இவர் வசிஷ்டரின் கொள்ளுப் பேரர், சக்தி முனிவரின் பேரர், பராசர முனிவரின் குமாரர், சுகபிரம்ம ரிஷியின் தந்தையாவார். இதைத்தாண்டி அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் ஆவார். இவர் தோன்றிய நாளே குருபூர்ணிமாவாகக் கொண்டாடப்படுகிறது.



இந்து மதத்தின் புனித நூல்கள் பல. அவைகளில் முதன்மையானது வேதங்களாகும். வேதம் என்றால் அறியப்படவேண்டியவை என்று பொருள். யார் எதை எப்பொழுது அறிந்தால் ஞானம் பெறமுடியுமோ அவற்றை அறிய துணை நிற்கும் ஒலிக்கூட்டங்களின் தொகுப்பே வேதங்கள். இதையே நமது சனாதான தர்மங்களின் தொகுப்பாக பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் நம் பெரியோர்களால் சொல்லப்பட்டு வருகின்றது. இதில் இடம் பெற்றுள்ள தர்மங்கள் யாவும் விஷ்ணு பகவானால் உருவாக்கப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. பண்டைய காலத்தில் தவமிருந்த ஞானிகள், ரிஷிகள் ஆகியோர் பெருஞ்சிரத் தையுடன் அந்த மந்திரங்களை தியானம் செய்து, அவைகளுக்குரிய தேவதைகளை வழிபட்டு அதை உச்சரிக்க

நெய்வாசல் நெடுஞ்செழியன்,
சிதம்பரம், 94422 05862.



பிரித்தார். அவை முறையே ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களாகும்.

ஒவ்வொரு வேதத்திற்கும், மந்திரங்கள் கடவுளால் தரப்பட்டவையாகக் கருதப்படும் பாடல்கள் பிராம்மணம் (உரை அல்லது சடங்கு வழிமுறைகள்), ஆரண்யகம் (காட்டில் வாழும் முனிவர்களின் உரைகள்), உபநிடதங்கள் (வேதங்களுக்கான தத்துவ உரைகள்/விளக்கங்கள்) என நான்கு பாகங்கள் உண்டு. முதல் இரண்டு பாகங்கள் கர்ம காண்டங்களாகவும் (ஓதுவதற்கும், சடங்குகளுக்கும்) அதாவது செயலுக்கு அல்லது அனுபவத்துக் குரியவையாகவும், கடைசி இரண்டு பாகங்கள் மெய்ப்பொருள் உணர்வதற்குரியவையாகவும் ஓதப்படுகின்றது. வேதங்களை தனிநபராக ஓதாமல் குழுவாக சேர்ந்து ஓதினால் நல்லபலன் கிடைப்பதை அறிவியலும் ஒப்புக் கொள்கிறது.

ஒவ்வொரு வேதத்திற்கும் உபவேதங்கள் உள்ளன. ஆயுர்வேதம் மருந்து மூலிகை போன்றவற்றைப் பற்றி கூறுகின்றது. தனுர்வேதம் போர்க் கலையைப் பற்றி கூறுகின்றது. காந்தர்வ வேதம் இசை நடனம் போன்றவற்றைப் பற்றி கூறுகின்றது. சில்பவேதம் கட்டிடக்கலைப் பற்றி கூறகின்றது.

வேதங்களை உருவாக்கி வகைப்படுத்தி அதை மக்களுக்குச் சென்றடையச் செய்த வியாசர் இந்து தர்மத்தின் மேன்மையை நிலைநாட்டுவதற்காகவும், மக்கள் தர்ம வாழ்வை கடைபிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் விதமாகவும் மகாபாரத காவியத்தை இயற்றினார். அக்காவியம் ஒரு கற்பனை காவியமாக இருக்கக்கூடாது என்று கருதி தன் பிறப்பைப் போலவே விதிவசத்தால் தனக்குப்பிறந்த தனது மகன்கள் திருதிராஷ்டிரன், பாண்டு, விதுரன் ஆகியோரின் குடும்பத்தில் நிகழ்ந்த தாயாதி சண்டையை கருவாக எடுத்துக் கொண்டு அவர் மகாபாரதத்தை சொல்ல, விநாயகப் பொருமான் தன் தந்தத்தை உடைத்து அதை எழுதியதாக புராணங்கள் கூறுகின்றன.

இதைத்தவிர வேதங்களில் உள்ளடங்கியுள்ள தத்துவங்களை மனிதர்கள் புரிந்துக்கொள்ளும் விதமாக பிரம்மசூத்திரம் எனப்படும் வேதாந்த சூத்திரங்களை எழுதினார். இது வியாசசூத்திரம்

கைவரப் பெற்றனர். பின்னர் அதை அவர் கள் தினந்தோறும் வாய் வழியாக உச்சரித்து மக்களை சென்றடையச் செய்தனர். இப்படி இந்து சமயத்தின் பழமையான தொன்மமாக வும், அழிவற்ற படைப்பு விதிகளின் தொகுப்பாகவும் வேதம் ஏற்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

வேதத்தில் இயற்கை முதல் இறைவன் வரை அனைத்தும் இடம்பெற்றுள்ளன. அது சுயநலத்துக்காக எழுதப்பட்டதோ, ஓதப்படுவதோ அல்ல. உலக நன்மைக்காகவும், மக்கள் நலனுக்காகவும் ஓதப்படுகிறது. வேதம் ஓதுவதும், கட்டுப்பாடான வாழ்க்கையை மேற்கொள்வதும், ஆத்மஞானம் பெறுவதற்கான சரியான வழியாக பார்க்கப்பட்ட காரணத்தால் இவ்விதிகளைக் கொண்டே படைப்புக் கடவுளான பிரம்மன் உலகைப் படைத்ததாக புராணங்கள் கூறகின்றன. எனவே இதனடிப்படையிலும் வேதங்கள் அநாதி அதாவது அழிவற்றதாகப் பார்க்கப்படுகின்றது.

கட்டற்ற வாழ்வியல் கருத்துக்களைக் கொண்ட வேதங்களை, குறைந்த ஆயுட்காலமும், குறைவான புரிதல் தன்மையும் கொண்ட கலியுகத்தார் புரிந்துக் கொள்வதற்கு ஏதுவாக வேதவியாசர் அதை நான்காகப்

என்றழைக்கப்படுகிறது. இவருக்குப்பின் ஆதிசங்கரர், இராமாநுஜர் மற்றும் மத்துவர் ஆகியோர் பிரம்ம சூத்திரத்திற்கு பாஷ்யம் எழுதியுள்ளனர். சைவ சமய சம்பிரதாயத்தின்படி ஸ்ரீகண்டாச்சாரியார் என்பவர் பாஷ்யம் எழுதியுள்ளார்.

இப்படி தன் நுண்ணறிவால் மனிதகுலத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கிய வேதவியாசர் இந்து மதத்தின் ஆதிகுருவாக போற்றப்படுகிறார். சீரஞ்சீவி பட்டம் பெற்ற எழுவரில் இவரும் ஒருவர். சீரஞ்சீவி என்றால் என்றென்றும் வாழ்பவர் என்று பொருள். கலியுகம் தோன்றி எவ்வளவோ ஆண்டு கள் ஆகிவிட்ட பின்னரும் வியாசர் வகைப் படுத்திய வேதங்களும், அவர் எழுதிய மகாபாரதமும் இன்றள வும் மக்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. அதில் கூறப் பட்டுள்ள ஒழுக்கத்தை பின்பற்றி வாழ வேண்டு மென உபன்யாசகர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இப்படி வாழ்க்கை ஒழுக் கத்தை போதித்த குருவை ஆஷாட பௌர்ணமி அன்று வணங்க வேண்டும் என்று சாத்திரங்கள் கூறு கின்றன.



மாதாபிதாவுக்கு அடுத்த படியாக குரு வருகிறார். அன்னைமீது கொள்ளும் பக்தி யால் இப்பிறவியில் இன்பம் பெற லாம். தந்தைமீது கொள்ளும் பக்தியால் மறுபிறவியில் இன்பம் காணலாம். குரு மீது பக்தி கொள்ளும்போது பிறப்பற்ற நிலையை எய்தலாம். விஷ்ணுபகவான் ஸ்ரீராமனாகவும், ஸ்ரீகிருஷ்ணராகவும் அவதாரமெடுத்தபோது ஒரு குருவிடம் தீட்சைப் பெற் றதை புராணங்கள் கூறுகின்றன.

இமயத்தில் மானா என்ற கிராமத்தில் வியாசர் பெயரில் குகை ஒன்றுள்ளது. மகாபாரதத்தை அவர் சொன்ன இடம் அதுதான் என்று சொல்லப்படுகிறது. ஒரிசா மாநிலத்தில் ரூர்கேலாவுக்கு 12 கிலோமீட்டர் தொலைவில் பான்பேஷ் என்ற ஊரில் மூன்று ஆறுகள் கூடுகின்றன. இதற்கு அருகிலுள்ள குன்றின்மீது வியாசருக்கு ஆலயம் உள்ளது. காசி நகரின் அக்கரையில் வியாசர் திருவுருவமும், அவர் வழிபட்ட லிங்கமும் கொண்ட ஆலயமுள்ளது.

இப்பகுதி வியாசகாசி எனப்படுகிறது. ஸ்ரீமத்வாச்சாரியார் பத்ரிநாத் சென்றபோது ஸ்ரீவேதவியாசரிடமிருந்து பெற்று வந்த கைப்பிடி மண் வியாச முஷ்டி என்றபெயரில் கோசலை வியாசராஜர் மடத்தில் வைத்து வழிபடப்பட்டு வருகிறது.

வியாசர் காஞ்சியில் தங்கி சிவ பெருமானை தரிசித்ததாக வரலாறு உண்டு. அதனால் இது வியாச சார்ந் தாயத்தலம் என்று கூறப்படு கின்றது. மஞ்சள்நீர் நதிக்கு அரு கில் அமைந்துள்ள மணிகண்டீ சுவரத்திற்கு தென்மேற்கில் வேகவதி ஆற்றின் வட கரையில் எளிமையான தோற் றத்துடன் இத்தலம் விளங் குகிறது.

16 பட்டைகளுடன் கூடிய இச் சிவாலயத்தின் மூலவர் வியாசசார்ந்தாலீ சுவரர் என்றழைக்கப்படு கிறார். இந்த சன்னதியிலுள்ள வியாசர் திருவுருவம் மிகவும் தொன்மையானது. காஞ்சி வரத ராஜர் கோயிலில் தாயார் சன்னதி யில் வியாசபகவான் ஜடாமகுடத் துடன் இருப்பது போலவும், அவருக்கு எதிரே ஆதிசங்கரர் இருப்பது போலவும் ஒரு சித்திரம் காணப்படுகிறது.

வியாசரின் மகனார் சுக பிரம்ம ரிஷியின் பெயருடன் அருள்பாலிக்கும் சேலம் சுகவ னேசுவார் ஆலயத்தில் வியாச பகவானுக்கு தனிச் சன்னதியுள்ளது.

நாம் எந்த வேதங்களை கடைபிடிப்பவர்க ளாக இருந்தாலும்சரி அந்த வேதத்தை நமக் களித்த வியாசரே நமது முதல்குரு. அவரை போற்றி வணங்கி வளம்பெறுவோம்.

# ஜுரத்தை போக்கும் ஸ்ரீசுதர்ஸனர்

திருமதி பிரேமா வரதன்,
புதுதில்லி, 9899713565.

திருமாலின் வலது திருக்கையில் எப்பொழுதும் விளங்குபவனும், பரமனுக்கு திவ்யாபரணமாயும், திவ்யாயுதமாயும் இருந்து, திவ்ய கைங்கர்யம் பண்ணும் நித்ய சூரியான திருவாழியாழ்வான், நம்மை அஞ்ஞான இருளிலிருந்து நீக்கி, தன்னுடைய ஞான ஒளியினால் விஷ்ணுவை அடையும் மார்க்கத்தை நமக்குக் காண்பிக்கிறான். சுதர்ஸனன் – நல்வழி காட்டுபவன் என்று பொருள்.

*''ஸ்புரத் ஸஹஸ்ரார சிகாதி தீவ்ரம்*
*சுதர்ஸனம் பாஸ்கர கோடிதுல்யம்*
*ஸுரத் விஷாம் ப்ராண விநாசி விஷ்ணோ:*
*சக்ரம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே''*

"பளிச்சிடும் ஆயிரம் ஆரங்களின் நுனிக் கருக்கினால் தீவ்ரமானவரும், கோடி சூர்ய பிரகாசத்தோடும், பராக்ரமத்தோடும் கூடியவரும், சாதுக்களின் பகைவர்களை அழிப்பவருமான திருவாழியாழ்வானின் திருவடிகளில் சரணடைகிறேன்" என்று கூறும் பஞ்சாயுத ஸ்தோத்ரத்தை நாம் தினமும் பாராயணம் பண்ணுகிறோம். அவனைப் போற்றிச் சரணடைவதால் நாம் வாழ்க்கையில் பல நன்மைகளைப் பெற்று வருகிறோம். எனவே, அவனது திருவருளால் நம் இன்னல்களெல்லாம் நீங்கி, நற்பேறு பெறுவோம் என்பது திண்ணம்.

ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் கைங்கர்யம் செய்து வந்த ஒருவருக்குக் கொடிய நோய் பற்ற, அதைக் கண்டு பொறுக்க மாட்டாத சுதர்ஸன உபாஸகர் ஸ்ரீகூர நாராயண ஜீயர் ஸ்வாமிகள் "சுதர்ஸன சதகம்" என்ற 100 சுலோகங்கள் கொண்ட நூலை இயற்றி, அவரின் நோய் தீர சுதர்ஸனாழ்வானைப் பிரார்த்திக்க, அவ்வாழியாழ்வானின் அனுக்ரகத்தினால் பூரண குணமடைந்து, மீண்டும் அரங்கனுக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்றார்.

இந்நூல் ஜ்வாலா வர்ணநம், நேமி வர்ணநம், அர வர்ணநம், நாபி வர்ணநம், அகடி வர்ணநம், புருஷ வர்ணநம் என்ற 6 பகுதிகளைக் கொண்டது. மிகவும் கருத்தாழம் கொண்டதும், பக்தி ப்ரவாஹமெடுக்கும் வேதத்துக்குச் சமமான இந்நூல், காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் ஸ்வாமி (தமக்கு உடல் நிலை சரியில்லாமல் போகும் போதெல்லாம்) தம் க்ருஹத்தில் சுதர்ஸன சதக பாராயணம் செய்வித்து, வலி தீரப் பெற்று, தேவப்பெருமாள் கைங்கர்யத்துக்குக் கிளம்பி விடுவார். அதை நேரில் பார்த்தவர்கள் யாவரும் வியந்து போவர்.

ஒரு சமயம் திருப்புட்குழி என்னும் திவ்ய தேசத்தில் ஜனங்கள் சீத ஜுரத்தால் பரிதவித்த போது, அதை அறிந்த ஸ்ரீதேசிகன் "சுதர்ஸனாஷ்டகம்" என்ற 8 சுலோகங்களினால் சக்கரத்தாழ்வாரைப் போற்றித் துதிக்க, அவரது அனுக்ரகத்தினால் மக்கள் நோய் நீங்கி ஆரோக்கியமாக வாழ்ந்தனர் என்பது சரித்திரம்.


எம்பெருமானுக்கு 5 திவ்யாயுதங்கள். "சுதர்ஸனன்" என்று அழைக்கப்பெறும் சக்கரத்தாழ்வானுக்கோவென்றால் 16 திவ்யாயுதங்கள். இது குறித்து ஸ்வாமி தேசிகன் "ஷோடசாயுத ஸ்தோத்ரம்'' என்ற நூலை அருளிச் செய்துள்ளார்.

இதையே ஜீயர் ஸ்வாமியும் தமது 80வது சுலோகத்தில் உரைத்துள்ளார். ஆக இப்படி இரு மகான்களும் போட்டிப் போட்டுக் கொண்டு சுதர்ஸனரின் பெருமைகளைப் பரக்கப் பேசுகின்றனர். இதிஹாஸ புராணங்களினின்று ஸ்ரீசுதர்ஸன வைபவத்தைச் சிறிது அனுபவிப்போம் வாரீர்!

(சுதர்ஸன சதகம்–18) பகலில் அக்னியைத் தன் கர்ப்பத்தில் வைத்திருக்கும் சூரியனின் ஒளியை, சுதர்ஸனின் கிரணங்களின் ஒளி (தேஜஸ்) ஒன்றுமில்லாமல் செய்து விடுகிறதாம்.

மஹாபாரத யுத்தத்தில் அர்ஜுனனின் மகன் அபிமன்யுவை ஜயத்ரதன் கொன்று விட, அங்ஙனம் தன் மகனைக் கொன்ற ஜயத்ரதனை மறுநாள் சூரியா

## ஆன்மீகச்சிந்தனை



உட்காரும் போதும் எழுந்திருக்கும் போதும் பகவானை அழை. அழைத்தால் அவர் உடன் வருவார். ஒரு கணத்தில் ஐம்பது இடங்களுக்கு சுற்றி வந்து விடுகின்ற இந்த மனதை தெய்வத்தின் அருள் இருந்தாலேயே தடுக்க முடியும். தெய்வ நம்பிக்கை தெய்வத்தின் பெயர் இரண்டும் பாவங்களை வேருடன் அழித்து விடும். வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கச் சுலபமானதும் மேலானதுமான மார்க்கம் ஆண்டவனின் நாமத்தை மௌனமாக துதிப்பது

**தொகுப்பு : திரு. எம். இராதாகிருஷ்ணன், வாணியம்பாடி**

ஸ்தமனத்துக்குள் தான் கொல்லாவிடில், தீயில் குதித்து உயிர் துறப்பதாக அர்ஜுனன் சபதம் செய்ய, அதை அறிந்த பகைவர்கள், மறுநாள் பகல் முழுவதும் ஜயத்ர தனை வெளிப்படுத்தாமல் சேனையின் நடுவே நிலவறை யில் மறைத்து வைக்க, இதை அறிந்த கண்ணபிரான் அர்ஜுனனின் சபதத்தை நிறைவேற்ற, சூர்யாஸ்தமனத் துக்குச் சில நாழிகை இருக்கும்போதே தனது திருவாழி யினால் சூரியனை மறைத்து விட, அப்பொழுது எங்கும் இருள் பரவியதனால், அர்ஜுனன் அக்னிப்ரவேசம் செய் வதைக் களிப்போடு காண்பதற்குத் துரியோதனாதி களுடனே ஜயத்ரதன் வந்து எதிர் நிற்க, அந்த நொடியில் கண்ணபிரான் திருவாழியை வாங்கி விடவே, பகலாகி விட்ட நிலையில் அர்ஜுனன் ஜயத்ரதனின் தலையைத் துணித்தான் என்பது வரலாறு.

திருவாழியாழ்வானின் விக்ரமாதிசயம் (சுதர்ஸன சதகம்–19) ஏகாதசி விரதத்தை நியமம் தவறாமல் ஒவ்வொரு முறையும் அனுஷ்டித்து வந்த பரம பாகவ தரான ஸ்ரீஅம்பரீஷ மன்னரின் பக்திக்கு உகந்த எம்பெருமான், சுதர்சனாழ்வானை, அவ்வரசனுடைய க்ருகத்தில் இருந்து கொண்டு அவனுக்கு ரக்ஷையாக இருக்கும் படி நியமித்திருந்தான். இப்படியிருக்கையில் மிகவும் விசேஷமான ஒரு த்வாதசியன்று துர்வாஸ முனிவர் ஆதித்யம் வேண்டி வந்தார். அதைத் தன் பாக்ய மாகக் கருதிய அம்பரீஷர், அம்மாமுனிவரை வர வேற்றுப் பாரணைக்கு எழுந்தருள வேண்ட, முனிவரும் சம்மதித்து, இதோ "மாத்யாஹ்னிக அனுஷ்டானம்" பண்ணிவிட்டு வருகிறேன் என்று சொல்லி யமுனைக்குச் சென்றவர், நெடும்போது தியானத்தில் இருந்து விட்டார். த்வாதசி திதி முடிவதற்குள் பாரணையும் பண்ண வேண் டும். அதிதி ஸம்ஸ்காரத்துக்கும் பழுதுபடக் கூடாது என்று சிந்தித்த தர்மவானான அம்மன்னவன், ஒரு துளசி தீர்த்த பானத்தாலே விர தத்தை முடித்துக் கொண்டு துர் வாஸ முனிவரை எதிர் பார்த்து நிற்க, ஸாவகாசமாக வந்த முனிவர் விஷய மறிந்து மிக்க சீற்றமடைந்து, தமது சிரஸ்ஸில் நின்றும் ஒரு சடையை எடுத்து, அதனால் காலாக்னி ஸத்ரு சமானவொரு க்ருத்யையை உண் டாக்கி, அம்பரீஷரைக் கொல்லுமாறு ஏவ, ராஜாவின் ரக்ஷைக்காக எப்பொழுதும் அவர் க்ருஹத்திலேயே தங்கியிருந்த சுதர்ஸனாழ்வான் ஒரு நொடிப் பொழுதி லேயே அந்த க்ருத்யையை தஹித்து விட்டு, அந்த துர்வா ஸரையும் நலிவதாக மிக்க ப்ரதாபத்துடன் அவரைத் துரத்திச் செல்ல, எங்குப் போயும் சரணம் பெறாது, "அம்பரீஷரின் காலிலேயே விழும்" என்று எம்பெருமா னும் கைவிட, கடைசியில் அம்மன்னன் காலிலே விழுந்து உயிர் தப்பினார்.

(சுதர்ஸன சதகம்–76) பகவத் சாஸ்த்ரமாகிய பாஞ் சராத்ர ஸம்ஹிதையும், அஹிர்புத்த்ய ஸம்ஹிதையும் திருவாழியாழ்வானை ஸ்ரீபரவாஸுதேவனுடைய ஸங் கல்பமாக ஓர் வடிவெடுத்து வந்ததாகத் தெரிவிக் கின்றன.

திருவாழியாழ்வானுடைய சக்தியானது எம்பெரு மானுடைய விபவ அவதாரங்களான இராமாவதாரத்தில் அவனுடைய பாணங்களிலும், வராஹ வதாரத்தில் அவ ருடைய கோரைப்பற்களிலும், நரசிம்ம அவதாரத்தில் அவருடைய நகங்களிலும், பரசுராம அவதாரத்தில் அவர் தம் கோடரியிலும், மற்ற அவதாரங்களில் அந்தந்த அவதாரத்திற்கேற்ப அவரவர் ஆயுதங்களிலும் பிரவே சித்திருந்தது. (வாமனாவ தாரத்தில் வாமனனின் கை பவித்ரத்திலும் திருவாழியின் சக்தியே பிரவேசித் திருந்தது என்பதை நினைவிற்கொள்க.) திருவாழியின் உண்மையான ஸ்வரூபத்தை நாரதாதி மகரிஷிகளாலும் அறிந்து கொள்ள முடியாது. அத்தகைய திருவாழியாழ் வான் நமக்கு தைவ மூலமாகவும் மனுஷ்ய மூலமாகவும் விளைகின்ற விபத்தைப் போக்கி அருள்வார்.

(சுதர்ஸன சதகம் 89) ஸ்ரீசுதர்ஸனாழ்வானின் வீர ப்ரதாபங்கள் அடங்கிய வெற்றிக் கதைகளான காசீ தஹ னம், சிசுபால வதம், நரகாசுரவதம், சூரியனை மறைத்த வரலாறு, கஜேந்திரனைக் காப்பாற்ற முதலையை வதைத்த வரலாறு, சீமாலிக வதம் ஆகியவற்றை மேரு மலைக் குகைகளில் கின்னர ஸ்த்ரீகளால் பாடப்படும்


வைபவங்களுடைய திருவாழியாழ்வான் பார்புகழும் சம்பத்தை நமக்குத் தரட்டும் என வாழ்த்துகிறார் ஜீயர் ஸ்வாமி.

(சுதர்ஸன சதகம் 91) காலச் சக்ரம், ப்ருத்வீ சக்ரம், அப்சக்ரம், தேஜஸ்சக்ரம், வாயு சக்ரம், ஆகாச சக்ரம் என்ற 6 சக்ரங்களிலும், உத்பத்தி, ஸ்திதி, ஸம்ஹாரம், நிக்ரஹம், அநுக்ரஹம் ஆகிய 5 தொழில்களுக்குத் தகுதியாக 32, 16, 8 முதலிய எண்களுக்கு ஏற்ற பெரிய புஜங்களின் பிரகாசத்தை உடைய திவ்ய மங்கள விக்ரகத்துடன் ஸ்ரீசுதர்ஸனாழ்வான் எழுந்தருளிருப்பார்.

(சுதர்ஸன சதகம் 98) பல கிளைகளையுடைய "சாகை" என்னும் பிரிவுகளையுடைய செவ்விய அசோக வ்ருக்ஷத்தின் அடியிலும், வேதமூலமான ப்ரணவத்தி லும் எழுந்தருளியிருக்கிற 4 சக்கரங்களால் அலங்கரிக் கப்பட்ட 4 பாஹு தண்டங்களையும், சக்ரம் முதலிய 8 ஆயுதங்களால் அலங்கரிக்கப்பட்ட 8 பாஹு தண்டங் களையும் உடையதாய், பின்புறத்தில் நரசிம்மத்வமும், முன்புறத்தில் மனுஷ்யத்வமும் விளங்கப் பெற்றதான ஒரு தத்வம் ஸாம்ஸாரிக பயத்தினின்றும் நம்மைக் காப் பாற்றட்டும்.

சக்கரத்தின் பச்சாத் பாகத்திலே சாகோபசாகமாக வளர்ந்திருக்கிற அசோக வ்ருக்ஷத்தின் அடியிலே நர சிம்ம மூர்த்தியாக வீற்றிருந்து 4 திருக்கைகளிலும் சக்கரத்தையே தரித்து விளங்குகின்றமை உணர்க.

(சுதர்ஸனாஷ்டகம் 7–8) ப்ரத்யாலீட ஸ்திதி – திருவாழியாழ்வானே! நீர் ஒரு திருவடியை முன்னும், மற்றொரு திருவடியைப் பின்னுமாக ப்ரத்யாலீட ஸ்திதி யின் அழகு தான் என்னே! ஆயுதங்களுக்கெல்லாம் தலைவரான ஆயுதேச்வரரே! (சாஸ்த்ரப்படி) பெரிய





சுதர்ஸன யந்த்ரம் அமைத்து பக்தர்கள் உம்மை வழிபடு கின்றனர். அடியவர்களிடம் நீர் வைத்துள்ள "தயை" என்னும் யந்த்ரத்தால் கட்டுண்டு பக்தர்களுக்குப் பல நன்மைகள் புரிகிறீர்.

சுதர்ஸனாழ்வானே! 6 எழுத்துக்கள் உள்ள மஹா சுதர்ஸன: (ஓம் ஸஹஸ்ரார ஹும்பட்) என்பது தேவரீரின் திருமந்திரம். அதை ஜபிப்பவர்களுக்கு எல்லாச் செல்வங்களும் கிடைக்கும். ஆறு கோணங்கள் உள்ள யந்த்ரத்தில் தேவரீரை ப்ரதிஷ்டை பண்ணி பலர் உபா ஸனை பண்ணுகின்றனர். பகவானைப் போலவே நீரும் எல்லாப் பொருட்களிலும் உள் நிறைந்து விளங்குகிறீர். ஸத்ய ஸங்கல்பரான கற்பக வ்ருக்ஷமே! நீர் வாழ்க!

*''ஜய ஜய ஸ்ரீசுதர்ஸன!''* என்று பல்லாண்டு பாடுகிறார் ஸ்வாமி தேசிகன்.

சரீரத்தில் சக்தியின்றி, கண் பார்வை போய், புத்தி தடுமாறி, உள்ளம் உடைந்து இருண்டு, பேச்சுக் குழறி, உயிர் நீங்கும் அளவில், அந்த யமனுக்கும் பயத்தைத் தருபவரும், நர உருவும் சிங்க உருவும் கலந்து (நரசிங் கனாக) விசித்ரமாயும், பரிசுத்தமாயும் தேவ குலத்துக்கு காப்பாளனாயும், முக்கண் உடையவராயும், கூர்மை யான கோரைப் பற்களை உடையவராயும், சக்ரத்தி னுள்ளே இருப்பவராயும், திவ்ய தேஜஸ்ஸை உடைய வருமான திருவாழியாழ்வான் நமக்கெல்லாம் சேவை சாதித்து, நம்முடைய பயத்தைப் போக்கி அருளுமாறு பிரார்த்திக்கிறார் ஸ்ரீஜீயர் ஸ்வாமி.

இப்படியாக, ஸ்ரீஜீயர் ஸ்வாமியையும், ஸ்வாமி தேசிகனையும், புருஷகாரமாகப் பற்றி சுதர்ஸனாழ் வாரின் திருவடி பணிந்து உய்வோமாக!

**ஜய ஜய ஸ்ரீசுதர்ஸன!**

# கோடி பலன் தரும் ஆடி

புலவர் க.சுகுமாரன், மன்னார்குடி,
98658 42905



வருடத்தின் எல்லா மாதங்களுமே சிறப்பு வாய்ந்தவை என்றாலும் ஆடி மாதம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இம்மாதம் தான் தட்சினாயணம் தொடங்கும் மாதம். அதாவது சூரியன் தென்திசை நோக்கி நகரும் காலம். அப்போது பலசூட்சும சக்திகள் வெளிப்படுகின்றன. அதோடு நல்ல கதிர் வீச்சுகளும் ஏற்படுகின்றன. அதனால் ஆடி மாதத்தில் கோயிலுக்குச் சென்று வழிபடும் பழக்கத்தை ஏற்படுத்தினார்கள். அப்போது தான் நுண்ணிய சக்திகள் இறைசக்தியோடு கலந்து நம் உடலுக்கும் மனதுக்கும் நல்ல ஆரோக்கியத்தை வழங்கும். ஆடி மாதம் அம்மன் மாதம் என்று பாமரர்களாலும், சக்தி மாதம் என்று படித்தவர்களாலும் போற்றப்படுகிறது. இந்த மாதத்தில் தான் ஈசுவரனின் சக்தி, அன்னை லோகநாயகியின் சக்திக்குள் ஐக்கியமாகி விடுகிறது. இம்மாதத்தில் தான் அம்மனை வழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆடிமாதத்தில் எல்லா ஊர்களிலும் கூழ் ஊற்றுதல், தீமித்தல், அம்மனுக்குத் திருவிழா என பல வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

பொதுவாகவே சித்திரை வருடப் பிறப்பு முடிந்ததும் எந்த பண்டிகையும் வராது. ஆவணியில் தான் கிருஷ்ண ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி என்று வரிசையாக பண்டிகைகளின் அணிவகுப்பு தொடங்கும். அதனால் ஆடி மாதத்தைப் பண்டிகைகளை அழைக்கும் மாதம் என்பர். இந்த மாதம் முழுவதுமே இறைவழிபாட்டில் மனதைச் செலுத்த வேண்டும் என்பதாலேயே பிற விசேஷங்களைச் செய்யக் கூடாது என்றார்கள். உதாரணமாக கல்யாணம், காது குத்துதல், புதுமனை புகுதல் போன்றவை இந்த மாதத்தில் செய்ய மாட்டார்கள்.

செவ்வாயும், வெள்ளியும் அம்மனுக்கு உகந்த நாட்கள். அதோடு ஆடி மாதமும் சேர்ந்து விட்டால் இவ்விரண்டு நாட்களுக்கும் சிறப்புத் தன்மை அதிகமாகி விடுகிறது. சாதாரண நாட்களில் இருக்கும் விரதத்தைப் போல பலபல மடங்கு பலன் தருகிறது ஆடி மாத செவ்வாய்க்கிழமை விரதம். ஆடிச் செவ்வாய்க்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து, மஞ்சள் பூசிக் குளித்து விரதமிருந்தால் அன்னை உமையவள் கேட்ட வரம் தருவாள் என்பது ஐதீகம். இந்த விரதம் இருந்தால் வீட்டில் அமைதி என்றும் நிலவும். ஆடி வெள்ளியும் விசேஷமானது தான். அன்றும் எண்ணெய் தேய்த்துக் குளித்து அம்மனை நினைத்து கூழ் ஊற்றி, தானும் அந்தக் கூழையே உண்டால், செல்வம், ஆரோக்கியம், நல்ல குழந்தைகள் என அம்மன் அருளுவாள்.

### தீமிதிக்கும் பழக்கம் எப்படி வந்தது?

ஆடியின் தேய்பிறையின்போது வரும் ஏகாதசி யோகினி ஏகாதசி என்றும், வளர்பிறையில் வரும் ஏகாதசி சயனி ஏகாதசி என்றும் சொல்லப்படுகிறது. ஒரு சமயம் குபேரனிடம் ஹேமமாலி என்பவன் வேலை பார்த்து வந்தான். அவன் தனது மனைவியின் அழகில் மயங்கி அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். அவனால் வேலையைச் சரிவர செய்ய முடியவில்லை. கோபம் கொண்ட குபேரன் அவனை பெரு நோயாளி

ஆகும்படி சபித்தான். வேதனைப்பட்ட அவனுக்கு சாப விமோசனத்துக்கு வழி சொன்னார் ரோமச முனிவர். ஆடி மாதம் தேய்பிறை ஏகாதசியின் போது விரதமிருந்து தீமிதித்து அம்மனை வழிபட்டதால் நோய் நீங்கி நல்ல உருவம் பெற்றான். அதனால் ஆடி மாத ஏகாதசி யோகினி என்று அழைக்கப்பட்டது. அப்போது முதலே ஆடி மாத தீமிதி விழாவும் ஆரம்பமானது.

**பூர்வ புண்ணியம் :**

ஆடி மாதம் என்பது தேவர்களுடைய மாலை நேரமாகும். ஆகவே நம் முன்னோர்க்கு பித்ரு காரியங்கள் அதாவது திதி முதலியன கொடுத்து அவர்களை சந்தோஷப்படுத்த ஏற்ற தருணம். ஆடி மாதம் எந்த நாளில் வேண்டுமானாலும் திதி கொடுக்கலாம். அதிலும் ஆடி அமாவாசை அன்று கொடுக்கப்படும் திதிக்கு பலன் மிக அதிகம்.

சிலருக்கு ஜாதகத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானம் மிகவும் பலவீனமாக இருக்கும். அப்படி இருந்தால் செய்யும் செயல்களுக்குரிய முழுமையான பலன்கள் கிடைக்காது. எந்தச் சிறு செயலையும் போராடித் தான் செய்ய வேண்டியது இருக்கும். அப்படியும் அது வெற்றிகரமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அதைச் சரி செய்ய முன்னோரின் ஆசியும், சந்தோஷமும் முக்கியம். அதனால் தான் சிரார்த்தம், திதி முதலியவற்றைக் கொடுக்கிறோம். அதை ஆடி அமாவாசை அன்று செய்தால் கூடுதல் நன்மை பயக்கும்.


பூமாதேவி பெரியாழ்வாரின் திருமகளாக கோதை நாச்சியாராக துளசிச் செடியின் கீழ் அவதரித்தது ஆடிப் பூர நாளில் தான். அன்றைய தினம் கன்னிப் பெண்கள் ஆண்டவனை வழிபட்டு அவனது பூ பிரசாதத்தைச் சூடிக்கொண்டால் மன துக்கினிய கணவர் வருவார் என்பது ஐதீகம். எண்களில் 18 என்ற எண் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மகாபாரத யுத்தம் நடந்தது 18 நாட்கள். புராணங்கள் 18, ஐயப்பன் கோயில் படிகள் 18. இப்படி நிறைய உண்டு. அதனாலே ஆடி 18 சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஆடி மாதம் நதிகளில் பூரணப் பிரவாகம் பொங்கி இருக்கும். புது வெள்ளம் வந்து பழைய அழுக்குகளை நீக்கி விடும். வேளாண் பெருமக்கள் “ஆடிப்பட்டம் தேடி விதை” என்ற பழமொழிக்கேற்ப விதை தெளிக்கும் பணியில் ஈடுபடுவர். பூமித்தாய் கண் திறந்து நிறைய மகசூலை அள்ளித் தரவேண்டும். அதற்கு ஆறுகள் துணை புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டாடப்படுவதே ஆடிப்பெருக்கு பண்டிகையாகும். காவிரி நதி பாயும் இடங்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. காவிரியை அம்மனாகப் பாவிக்கிறார்கள். அன்றைய தினம் கர்ப்பிணிப்பெண்கள் மிகவும் விரும்பும் உணவு வகைகளான புளிசாதம், எலுமிச்சை சாதம், சர்க்கரைப் பொங்கல் என்று படைத்து வழிபடுகிறார்கள். அதோடு வருடம் முழுவதும் மங்களம் தங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, பூ, காதோலை, கருகமணி, மஞ்சள் கயிறு முதலியவற்றை ஆற்றில் சமர்ப்பிக்கிறார்கள். பல குடும்பங்களில் தாலி மாற்றும் சடங்கும் நடைபெறுகிறது. அவ்வாறு செய்தால் கணவன் நீண்ட ஆயுளும் மனைவியின் மேல் ஆராத அன்பும் கொண்டிருப்பான் என்பது மக்களின் நம்பிக்கை.



ஆடி மாதம் முழுவதுமே அன்னை உமையவளின் வழிபாட்டுக்குரிய மாதமாக நடைபெறுகிறது. நாமும் ஆடி மாத பூஜைகள் ஆராதனைகளில் கலந்து கொண்டு நீண்ட ஆயுளும், மங்களம் நிறைந்த வாழ்வும் பெருமைக்கு உரிய குழந்தைகளும் பெற்று நிறை வாழ்வு பெறுவோம்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 47



**தொகுப்பு :**
**திரு. எஸ். ராஜகுமார்,**
**சென்னை, 8124930259**

புதிருக்கு விடை அறிய
51ம் பக்கம்
பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

1. நிலவுலகில் காண முடியாத திவ்ய தேசங்களில் ஒன்று......(8)
5. ஸ்ரீராகவேந்திரரின் சீடர்.....(10)
6. அசோகவனத்தில் சீதைக்கு துணை யாக இருந்தவர்....(4)
9. திருமாலின் வலக்கையில் உள்ள சக்ராயுதம்.....(9)
12. எட்டு ஸ்வயம் வக்த க்ஷேத்திரங் களில் முதன்மையானது....(5)
13. ஸ்ரீமகாலட்சுமியிடம் தன் பெயரையே ஊரின் பெயராக வைக்க வேண்டும் என கோரிக்கை வைத்த அரக்கன்......(5)
15. குறையொன்றுமில்லாத....(5) என்று ஆண்டாள் குறிப்பிடுகிறார்.

## வலமிருந்து இடம்

4. இராமானுஜரைப் போற்றுவதாகப் பொருள்.....(10)
7. பிரம்மாவிடமிருந்து வேதங்களை திருடிச் சென்ற அரக்கர்களில் ஒருவர்....(4)
8. இராமன் வதம் செய்த அரக்கி.....(3)
10. திருமலையில் பெருமாள் குடி கொண்டிருக்கும் இடம்....(8)
11. விஷ்ணு எடுக்க இருக்கும் பத்தாவது அவதாரம் ....(3)
14. சத்திய லோகத்தில் பிரம்மாவால் பூஜிக்கப்பட்டது .....(6) அவதாரம்.
16. வாலியின் மனைவி....(2)
17. திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது....(8)
23. சப்த ரோமர் என்னும் முனிவருக்காக கஜேந்திர வரதராக அருள்பாலித்தத் திருத்தலம்....(8)

## மேலிருந்து கீழ்

2. ஸ்ரீகிருஷ்ணர் நாராயண பட்டாத்திரிக்கு அருள்பாலித்த திவ்ய திருத்தலம்.....(5)
3. கஜேந்திரன் என்னும் யானைக்கு பெருமாள் அருள் புரிந்த திவ்ய தேசம்....(9)

## கீழிருந்து மேல்

18. ஏழு சப்த தான தலங்களில் ஒன்று.....(7)
19. மல்லிப் பொட்டு என்னும் மூலிகைப் பொருட்கள் அடங்கிய பிரசாதம் வழங்கும் பெருமாள் திருத்தலம்...(8)
20. காணாமல் போன சிலையை கண்டுபிடித்து மீண்டும் அதை கோயிலுக்குள் இராமானுஜர் நிறுவிய தலம்.... (5)
21. தசரதனின் குலகுரு....(5)
22. தசரதர் புத்ர காமேஷ்டி யாகம் செய்ய உதவியவர்....(8)



# கருட விரத வழிபாடு

திரு. ஆர்.வி. பழனி, புதுச்சேரி, 94430 94721.

கருட பகவான் எல்லா பெருமாள் கோயில்களி லும் பெரிய திருவடியாக வீற்றிருக்கிறார். மற்ற தெய்வங் களின் சிறப்பு வழிபாடு போல கருட பகவானுக்கும் சிறப்பு வழிபாடுகள் உண்டு. இதை பக்தர்கள் அனைவரும் சிரத்தையோடு கடைபிடித்து ஸ்ரீகருடபகவானின் அருளா சிக்குப் பாத்திரமாக வேண்டும்.

“கரு” என்பதற்கு சிறகு என்று பொருள். “ட” என்றால் பறப்பவர். சிறகுகளைக் கொண்டு பறப்பவர் என்பதே இத்திருநாமத்திற்குப் பொருள். அனைத்து பறவைகளும் சிறகுகளைக் கொண்டே பறக்கின்றன. ஆனால் அவற் றிற்கு இப்பெயர் ஏற்படாமல் போக, கருடனுக்கு மட்டும் அமையக் காரணம், இவரே சிறகுகளைக் கொண்டு நினைக்கவும் இயலாத அதிவேகத்தில் பறக்கும் திறனைப் பெற்றிருக்கிறார்.

ஸ்ரீமந்நாராயணனின் வாகனமான கருடாழ்வாரின் மகத்துவம் சொல்லில் அடங்காது. அவருக்கென்றே “கருட பஞ்சமி” என்ற பண்டிகை கொண்டாடப்படுகிறது. கருட பஞ்சமி கர்நாடகாவில் பெண்களால் விரதம் இருந்து மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வட இந்திய ரக்சாபந்தன் போல தன் சகோதரர்களின் நலன் வேண்டிச் செய்கின்ற பண்டிகை கருட பஞ்சமி.

**பெரிய திருவடியாம்...**

கருடன் என்று போற்றப்படும் பறவையை ராஜ பட்சி– பறவைகளின் தலைவன் என்று சொல்வார்கள். சாஸ்திர சம்பிரதாயங்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள ஒரு விசேஷமான பறவை.

நாக சதுர்த்திக்கு அடுத்த நாள் வருவது கருட பஞ்சமி விரதம். மகளிர் விரதமிருந்து கருடனை வழிபட்டால் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும். மகப்பேறு கிடைக்கும். செல்வம் பெருகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். நாக தோஷங்கள் விலகி விடும்.

ஆர்வம் நிறைந்த ஆழ்ந்த பக்தியுடன் கருடனை வழிபட்டால், வழிபாட்டின் முடிவில் கருட தரிசனம்



**ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்**

குருதே கங்கா ஸாகர கமனம்
வ்ரத பரிபாலனம் அதவா தானம்।
ஜ்ஞாந விஹீந: ஸர்வ மதேந முக்திம்
ந பஜதிஜன்ம ஸதேந॥

**ஒருவன் கங்கா நதிக்குச் செல்கிறான் (ஸ்நானம் செய்து மோக்ஷம் அடைய), மற்றொருவன் கடலுக்குச் சென்று ஸ்நானம் செய்கிறான். மற்றொருவன் பல விரதங்களை மேற்கொள்கிறான்... பல வித தானங்களை செய்கிறான். இதெல்லாம் செய்து “நூறு பிறவிகள்” அடைந்தாலும்... “உண்மையான ஞானம் இல்லாதவன்” எந்த நிலையி லும் முக்தியை (மோக்ஷத்தை) அடைய முடியாது.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

கிடைப்பது உறுதியாகும். கருட தரிசனம் கிடைத்தால் விரதத்தை உடனே முடித்துக் கொண்டு உணவருந்த லாம்.

ஸ்ரீகருட வழிபாட்டை ஒவ்வொரு மாதத்திலும் அவ ரின் திதி, நட்சத்திரத்தில் மேற்கொள்ளலாம். மாதந் தோறும் வருகின்ற வளர்பிறை பஞ்சமி திதி அன்றும், சுவாதி நட்சத்திரத்தன்றும் கருட வழிபாடு செய்ய ஏற்ற திதி நட்சத்திரமாகும்.

மேலும் அவரவர் ஜென்ம நட்சத்திரத்தன்றும் கருட வழிபாட்டை செய்து, அவரின் அருளாசியால் சகல நன்மைகளையும் பெறலாம். கருட பகவானுக்கு பிடித்த மான அபிஷேக ஆராதனைகள், பலகார பட்சணங்கள் போன்றவற்றைச் சிறப்பாக சமர்ப்பித்து அவரது அருளைப் பெறலாம்.



நாம் வெளியில் செல்லும் போது கருட பகவான் வலமி ருந்து இடம் போனால் எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு. நமக்கு மேலே கருடன் வட்ட மிடுவது நலத்தையும், நன்மைகளையும் கொடுக்கும்.

கருடன் இரை யைக் கவ்வியபடி வல மிருந்து இடம் போனால் ஆதாயம், வெற்றி உண்டா கும். அத்துடன் பகைகள் அழியும். கருடனை நாம் எந்தத் திசையில் காண்கி றோமோ அந்தத் திசையில் இருந்து லாபம் ஏற்படும்.

அனைத்து விஷ்ணு கோயில்களிலும் மதில் சுவற்றின் நான்கு மூலைகளிலும் இந்த கருடாழ்வார், தனது இறக்கைகளை விரித்துக் கொண்டும், ஒரு காலை முன் வைத்து புறப்படும் நிலையில் தயாராகவும் இருக்கின்றார். இந்த முன்னேற்பாடுகள் அனைத்தும் நமக்காகத்தான்.

நமக்கு ஏதேனும் இடர் ஏற்படும்போது, அதனை நீக்குவதற்கு ஸ்ரீகருடாழ்வார் புறப்பட்ட நிலையில் தயாராக உள்ளார் என்ற எண்ணமும் நம் மனதில் எழ வேண்டும்.



## ஸ்ரீமத் பாகவதம் வினாக்கள்

திருமதி என். ஹேமா,
திருப்பதி.
77020 15076

1. ஸ்ரீஹரியின் தேஹம் எப்படிபட்டது?
2. 84 லக்ஷ ஜீவராசிகளுக்கும் பிறவியை கொடுத்தவர் யார்?
3. மஸ்ய ரூபி பரமாத்மா சத்யவ்ரதனை எங் ஙனே காப்பாற்றினார்?
4. சத்யவ்ரதன் எந்த மன்வந்த்ரத்திற்கு மனுவாக நியமிக்கப்பட்டார்?
5. அஜாமிளனுக்கு யமதூதர்கள் பாசக்கயிறு வீசியபோது என்ன நடந்தது?
6. யார்யாரை போஜனம் ஆன பிறகு ஸ்மரணம் செய்ய வேண்டும்?
7. வைவஸ்யிதனின் கடைசி மகன் யார்?
8. நபாகராஜனின் மகன் யார்?
9. கிருஷ்ணரின் பால லீலைகள் எந்த அத்யா யத்தில் உள்ளது?
10. பிரம்மரும், ருத்ரரும் சேர்ந்து செய்த ஸ்தோத்ரம் எது?

விடைகளுக்கு 53ம் பக்கம் பார்க்க...

# திருவாடிப்பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே

– திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர்,
9962788065

விதேக நாடு, மிதிலை நகரம். ஜனக மஹாராஜா யாக சாலை அமைக்க வேண்டி பூமியை உழுதான். அப்போது பூமிதேவியின் அம்சமாக சீதாப்பிராட்டித் தோன்றினாள். அது திரேதா யுகம். அக்குழந்தையை தன் மகளாக வளர்த்தான். அப்பூமிதேவியே கலியுகத்தில் 9–ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரால் அமைக்கப்பட்ட நந்தவனத்தில் வடபத்ரசாயி ஆலயத்தில் திருத்துழாய் (துளசிச்) செடியருகே, நள ஆண்டு ஆடி மாதம் சதுர்த்தசி திதியில் செவ்வாய்க்கிழமை பூரம் நட்சத்திரத்தில் கண்டெடுக்கப்பட்டாள். கண்டெடுத்த புண்யவான் பெரியாழ்வார் அக்குழந்தையைத் தம் மகளாகவே பாவித்து வளர்த்தார். "கோதை" என்று பெயரிட்டு அழைத்தார். ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபத்ரசாயிப் பெருமாளுக்குப் பூமாலை சூடிக்கொடுக்கும் கைங்கர்யம் செய்து வந்த பெரியாழ்வாரும் கோதைக்குப் பகவான் கண்ணனின் அவதார ரஹஸ்யங்களையும், பாலலீலை களையும், உபதேசித்தார். ***"ஒரு மகள் தன்னையுடையேன், உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்"*** என்று பெரியாழ்வார் பாடுகிறார் (பெரியாழ்வார் திருமொழி : 3.8.4).

கோதை தெய்வீக ஞானத்தோடு வளர்ந்தாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் "கிருஷ்ண ப்ரேமை"யில் மூழ்கித் திளைத்தாள். திருத்துழாய் தோன்றும் போதே வாசனையுடன் திகழ்வது போல், கோதையும் மெய்ஞானமுடன் வளர்ந்து வந்தாள். ஞானமும் பண்பும் அனுபவமும் வளர, வளர, சமுதாயத்தில் வாழும் எல்லோரும் நல்வாழ்வும் நற்கதியும் பெற்று வாழ, அவர்களுக்கு வழிகாட்டியாக எண்ணிறந்த உண்மைகளை அவர்களுக்குக் காட்டிக் கொடுத்து வாழ்ந்தாள்.



தன் தந்தை, வடபத்ரசாயிப் பெருமாளுக்குத் தொடுத்த மாலைகள் புனிதமானவை என்று அறிவாள். ஆனாலும், தான் முதலில் சூட்டிக் கொண்டு அழுகு பார்ப்பாள். இம்மாலை பகவானுக்கு அழகை, கம்பீரத்தைக் கொடுக்குமா? என்றெண்ணிய புரட்சித்தலைவி. செய்யும் கைங்கர்யம் பயனாக இருக்க வேண்டுமென்று எண்ணிய உண்மை ஞானம்.

தந்தை இவள் செயலைத் தவறென்று எண்ணிக் கதறினார். ஆனால் பரமனோ கோதை சூட்டிய அம்மாலையே உகப்பன் என்றான். பெரியாழ்வார் வியந்தார். இக் குலமகள் யார் என்றெண்ணத் தொடங்கினார். திருமாமகட்கினியான் "குலமா

மகட்கினியான்" நிலமா மகட்கினியானான வடபத்ரசாயிப் பெரு மாளே கோதை செய்த காரியத்தை புனிதம் என்று அறிவித்த போது, பெரியாழ்வார் இவள் திருமகளோ, குலமகளோ அன்றி நிலமகளோ என்று வியந்து நின்றதில் ஆச்சரியமில் லையே! பெரியாழ்வாருக்கு உதவி செய்ய ஓடோடி வருகிறார் நம்மாழ்வார். *''பிள்ளைகொல்? நிலமாமகள் கொல்? திருமகள் கொல்? பிறந்திட்டாள் என்ன மாயங்கொலோ''* (திருவாய்மொழி 6.5.10) என்று பாடுகிறார்.

அன்று முதல் *''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி''* என்றே எல்லோராலும் அழைக்கப்பட்டாள். இந்த நாச்சியாரே தினமும் காரை பூண்டு கூறை உடுத்தி, கைவளை குலுக்கி, கோவைச் செவ்வாய்த் திருத்தித் தனது ஒப்பனை அழகு பார்த்து பகவா னுக்கு மாலையைச் சூடிக் கொடுத்தாள். இம் மாலையையே திருமாலும் உகந்து சூடிக் கொண்டான். இதோ உய்யக் கொண் டார் என்னும் ஆசார்யன் பாடிய தனியன்.

*''அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்*
*பன்னு திருப்பாவைப் பல்பதியம் இன்னிசையால்*
*பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை*
*சூடிக் கொடுத்தாளைச் சொல்லு''*

"பக்தர்கள் என்னை எவ்விதம் வழிபடுகிறார்களோ அவ் விதமே நானும் பக்தர்களை அணுகுகிறேன். அருள் புரிகிறேன். என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ அங்ஙனமே அவர் களைச் சார்கிறேன்". இது கண்ணன் வாக்கு (பகவத் கீதை 4–11). கீதாசார்யனான பகவான் வாக்கிற்கும், ஆண்டாள் அரு ளிச் செய்த பகவத் கீதையான திருப்பாவைக்கும் ஒற்றுமை காண்பர் பெரியோர்.

திருப்பாவை இளைஞர்களுக்கு நல்லொழுக்கம் போதிக் கும். இல்லற வாழ்க்கையில் உள்ளவர்களுக்கு அறநெறி யைப் போதிக்கும். பரகதியை மோக்ஷத்தை விரும்புபவர்க ளுக்கு சரணாகதி மார்க்கத்தை போதிக்கும். நாராயணனே பரம்பொருள். முழுமுதற் கடவுள் என்றும், அவன் திருவடி களையடைய பகவந் நாம சங்கீர்த்தனம் ஒன்றே வழி என்றும் திருப்பாவையில் உபதேசம்.

*''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி'', ''மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று நாமம் பலவும் நவின்று''* பல உதாரணங்கள். உயர்வற உயர் நிலையுடையவன் ஸ்ரீமந் நாராயணன் அவன் துயரறு சுடரடி வேண்டுமா. இதோ உபே தேசம். *''தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது, வாயி னால் பாடி மனத்தினால் சிந்திக்க, போய பிழையும் புகு தருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பு''*



பகவானுக்கும் பாகவதர்களுக்கும் கைங்கர் யம் செய்து வாழ்வதே பேரின்பம் என்றும் உப தேசம்.

*''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும், உன் தன்னோடு*
*உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்*
*வோம்*
*மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்''*

பகவானின் மனதில் குடி கொண்டாள். பக வானைக் கவர்ந்தாள். பகவானை ஆண்டாள். பாக வதர்களுக்கு ஆசிர்வாதம் செய்வதில் அவளுக்கு நிகர் யாருமில்லை.

*''நீங்காத செல்வம் நிறைந்து வாழ்''* ஆசிர்வாதம். *''வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து வாழ்''* ஆசிர்வாதம். *''செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புற''* ஆசிர்வாதம். ஆக பக்தர்களின் மனதில் குடி கொண் டாள். பக்தர்களை ஆண்டாள்.

ஆண்டாளுக்கும் கடினமான சூழ்நிலைகளை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. திருமால் தந்த சோதனைகள் ஏராளம். திருமால் ஆண்டாளைப் புறக்கணிப்பது போல் நடிப்பான். ஆற்றமுடைய ஆண்டாள் சீற்றமடைவாள். இவைகளை நாச்சியார்



திருமொழியில் காணலாம். ஜீவாத்மாக்களை உஜ்ஜீவிக்க பகவான் அளித்த வாக்குறுதிகளை பகவானுக்கு நினைவுறுத்தும் தைர்யசாலி ஆண்டாள். *''கோவர்த்தனனைக் கண்டீரே, ஈசன் தன்னைக் கண்டீரே, அக்கருமாமுகிலைக் கண்டீரே, ஆழியானைக் கண்டீரே, விமலன் தன்னைக் கண்டீரே''* என்று பகவானைத் தேடிக் கண்டுபிடித்து, இறுதியில் பகவானோடு ஐக்கியம் ஆகும் ஆண்டாளின் சந்தோஷம் அளவற்றது. அனுபவிக்க வேண்டியது.

ஆண்டாளுக்குத் தக்கக் கணவனைத் தேடும் படலம். பெரியாழ்வாரின் கவலை. *''மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்''* என்றும் ஆண்டாளின் மன உறுதி. அவள் கூறும் சமாதானம் இதோ. ஒரு வேள்வி. அங்கு தேவதைக்கு வழங்கப்படும் புனிதமான ஹவிஸ், தெய்வீகமான ஹவிஸ். ஒரு நரி, அந்த ஹவிஸை சாப்பிட முயன்றால் நரி விரட்டி அடிக்கப்படும்.

அதேபோல் தான் நானும் புனிதமானவள். திருமாலுக்கென்றே வாழப் பிறந்தவள். பெரியாழ்வாரின் கலக்கம் பாசுரமாக வெளிப்படுகிறது. *''தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் தனிவழி போயினாள் என்னும் சொல்லு, வந்த பின்னைப் பழி காப்பரிது''* (நாச்சியார் திருமொழி 12.3). அம்மா தவறு செய்து விடாதே. உன் இஷ்டப்படியே மணவாளனைத் தேடுகிறேன் என்கிறார் பெரியாழ்வார். *''கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக் கிடப்பேன்''* (நா. திரு 13.1) எல்லாம் கண்ணன் என்றிருந்தாள் ஆண்டாள்.

பல திவ்ய தேச பகவான்களை தரிசனம் செய்து, கடைசியில் ஸ்ரீரங்கம் அடைந்தாள். *''என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''* என்றாள். அரங்கனையே நாயகனாக வரித்தாள். அரங்கனையே மணந்தாள். *''உயர் அரங்கற்கே கண்ணி உவந்தளித்தாள் வாழியே''* என்று பாடி மகிழ்வோம்.

ஆண்டாளின் உபதேசத்தில் உத்தமமான உபதேசம் *''நானே தான் ஆயிடுக''* (திருப்பாவை 15). பிறரைக் குற்றம் சொல்லாமல் எவரையும் அவமரியாதை செய்யாமல் பேசவும் வாழவும் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே "ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்". ஒருவர் நம்மை பழித்துப் பேசுகிறார். காரணம் இருக்கலாம். இல்லாமலும் போகலாம். அழியக்கூடிய இவ்வுடம்பைத் திட்டுகிறார் என்று நினைத்தால் கோபம் எழாது. நாம் செய்யும் தவறுகளை நாமறிய மாட்டோம். பிறரால் மட்டுமே நம் குறைகளை நன்கு சுட்டிக் காண்பிக்க முடியும். அதை ஏற்போம். அவரை வணங்குவோம். நன்றி சொல்வோம். நம் தவறுகளைச் சொல்லி நம்மை பரிசுத்தமாக்க விரும்புகிறார்கள் என்று நினைப்பது ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம். இதுவே ஸ்வரூப ஞானம் என்பர் பெரியோர்.

ஸ்ரீராமன் வனவாசம் சென்றான். அதற்கு எவ்விதத்திலும் பரதன் காரணமில்லை. அம்முடிவு எடுத்த சமயம் பரதன் அயோத்தியிலும் இல்லை. ஸ்ரீராமன் வனவாசம் சென்ற பின் தசரத சக்ரவர்த்தி உயிர் மாண்டான். பரதன் அயோத்திக்கு திரும்பி அழைத்து வரப்பட்டான். விஷயங்கள் அறிந்து கதறினான். ஏங்கினான். புலம்பினான்.

ஸ்ரீராமன் வனவாசம் செல்ல யார் காரணம் என்று ஆராய்ந்தான். கூனி என்றார்கள் சிலர். கைகேயி என்றார்கள் பலர். கைகேயியையும் கூனியையும் தண்டிக்கத் தவறிய தசரதனே காரணம் என்றனர் சிலர். பரதன் இக்குற்றங்களை ஏற்கவில்லை. நானே தான் ஆயிடுக என்றான். நானே குற்றம் செய்தவன் என்றான். தமயனைப் பிரிந்து கேகய நாடு செல்லாமல் தமயனோடு இருந்திருந்தால் இந்நிலை வந்திருக்காது என்றான்.

ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்தில் "அடியேன்" என்றும், "ராமாநுஜ தாஸன்" என்றும் நம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறோம். இம்மனநிலை பகவத் பாகவத கைங்கர்யர்களில் நம்மை ஈடுபடுத்தும். ஸ்ரீஆண்டாளின் உன்னதமான இவ்வுபதேசம் நம்மை நல்வழிப்படுத்தும். உய்வோம் வாருங்கள்.

# ஸ்ரீநாகராஜ வழிபாடு



– திரு. ப. சரவணன், கும்பகோணம்,
9443171383

உலகத்தை காக்கும் கடவுளான மகாவிஷ்ணு சயனம் காணும் பாம் பணையாக, இயக்கும் கடவுளான பரமன் அணிந்து மகிழும் ஆபரணமாக, இச்சா சக்தியான ஆதி சக்தி சிரசில் படம் எடுத்தாடும் குடையாக, தேவர்களின் சேனாதி பதியான ஆறுமுக வேலனின் திருவடியை வணங்கும் நாக அஸ்திரமாக, விநாயக மூர்த்தி உடலில் சாஸ்திரத்திற்குக் கட்டுபட்ட பூணுலாக, இன்னும் பல இந்துக்கள் வணங்கி வழிபடும் இறை மூர்த்திகளில் நிறைந்து காணும் நாகர் எனும் ஸ்ரீஆதிசேட மூர்த்தி இல்லாத இடமில்லை என்று சொன்னால் அது மிகையாகாது.

அசுர வம்சத்தில் உதித்து அமிர்தம் உண்டதின் பயனாக தலை பகுதி வால் பகுதி என இரண்டு வடிவாகி நவக் கிரகங்களில் ராகு, கேது என்று வலம் வரும் பாம்பு (நிழல் கிரகம்) கிரகமான இராகு பகவான், கதிர் கரங்களால் ஒளி வீசி உலகாளும் தேவர்களான சூரியனை பிடிக்க அது சூரிய கிரகணமாகவும், சந்திரனை பிடிக்க அது சந்திர கிரக ணமாகவும் அழைக்கப்படுகிறது என்றால் ஸ்ரீஇராகு பகவானின் அருள் எத்தனை வலிமையானது.

இப்பூமியை தன் உடல் மீது தாங்கி உள்ள ஸ்ரீஆதிசேஷன் ஒரு முறை தன் உடல் நலிவுற சிவபெருமான் திருவுளப்படி, மகாசிவராத்திரி நாளன்று, முதலாம் சாமத்தில் கும்பகோணத்தில் குடி கொண்டுள்ள (கீழ்க்கோட்டம்) நாகேஸ்வரரையும், இரண்டாம் சாமத்தில் திருநாகேசுவர நாகநாதரையும், மூன்றாம் சாமத்தில் திருப்பாம்புரத்துப் பாம்புர நாதரையும், நான்காம் சாமத்தில் நாகூர் நாகநாதரையும் வழிபட்டு உய்வடைந்ததாகப் புராண வரலாறு கூறுவதுண்டு.

இந்நான்கு தலங்களும் இராகு பரிகாரத் தலங்களாகும். மேலும், ஆதிசேஷனின் ஏழு தலைகளைக் குறிக்கும் வண்ணமாக ஏழு சிகரங்களைக் கொண்டுள்ளதால், திருப்பதி திருத்தலம் சேஷாசலம் என அழைக்கப்படுகிறது. நாராயணன் ஸ்ரீராமபிரானாக அவதரிக்கையில் இலக்குவனாக உடன் வந்தவன் ஆதிசேஷனாவான். தனது இறுதிக்காலத்தில் காலாந்தகனைச் சந்திக்கும் வேளை நெருங்குகையில் எவரையும் அனுமதிக்க வேண்டாம் எனத் தம் தம்பியான இலக்குவனிடம் ஸ்ரீராமபிரான் கூறியிருந்தார்.

அவ்வேளை அங்கு துர்வாச மாமுனியை அனுமதிக்க இலக்குவன் தயங்கவே அவர் அவனைப் புளிய மரமாகப் பிறப்பெடுக்கும் படி சபித்து விட்டார். அவ்வாறு ஆழ்வார் திருநகரி என்னும் திருத்தலத்தில் இலக்குவன் புளிய மரமாகி விட, அவன் வேண்டுகோளுக்கு இணங்கி இராமபிரான் பின்னாளில் தாமே நம்மாழ்வாராக அவதரித்து அப்புளிய மரத்தில் காட்சி அளித்ததாகவும், இலக்குவன் திருப்புளியாழ்வாராக இங்கு காட்சியளித்தமையால், இத்தலம் சேஷ க்ஷேத்திரம் என விளங்குவதாகவும் ஐதீகம்.

வாழும் மானுடர் வாழ்வியலில் ராகு பகவானால் ஏற்படும் தோஷம் என்பது துயரம் மிக்கதாகக் கருதப் படுவதுண்டு. ஆனால் அவரை வணங்கி வழிபட தாம்பத்ய வாழ்வில் மன நிறைவான திருமண பாக்கியத்தை (நல்ல துணையை தருபவர்) தந்தருள்வார் என்பது ஐதீகம். மகத்துவம் பல பெற்று உயிர்கள் இருக்கும் காலம் வரை உயர்ந்த வாழ்வியல் தந்தருளும் உண்மையான அன்புக்கு அடிமையாகும், அருளும் ஸ்ரீநாகராஜனின் திருவடியை சரணடைவோம். நாமும் நலம் பெறுவோம்.



# திருவேங்கடவன் திருவருள் ஸ்ரீமந்நாதமுனிகள் திருஅவதாரம்

முனைவர் மன்னார்குடி ஸ்தானீகம் வேங்கடாசாரியர்,
காட்டுமன்னார்கோவில், 94446 49304.

திருமகள் கேள்வனான திருமால், உலகம் உய்யக் கலைகளையும், வேதங்களையும் நீதி நூல்களையும், சிற்ப நூல்களையும், சொற்பொருள் தரும் நூல்களையும், வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள் செய்தான். ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் அவதரிக்க அருள் செய்தான். அவன் அருளிய குரு பரம்பரையில் மிகச் சிறந்த இடத்தில் இடம் பெற்றிருப்பவர் ஸ்ரீமந்நாதமுனிகள் ஆவார். அவர் பெருமை கூறும் இரண்டு பண்டைய தனியன்கள் காணத் தக்கனவாகின்றன.

**முதல் தனியன் :**

*வ்யோம் ந: பரஸ்தாத் ஸவிதம் ஸமேத்ய*
*லக்ஷ்ம்யா நியோகாத் குரு காதிராஜ:*
*ஸமந்த்ர ரத்நம் த்வாயமாஹ யஸ்மை*
*நாதாய தஸ்மை முநயே நமோ (அ)ஸ்து.*

பரமபதத்திினின்றும் பெரியபிராட்டியார் (மகாலஷ்மி) ஆணையாலே நம்பியான நம்மாழ்வார், யோக தசையில் எவரை அடைந்து மந்த்ர ரத்னமான துவயத்தை உபதேசித்தாரோ, அந்த நாதமுனியின் பொருட்டு வணக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

இத்தனியன் பின்பழகிய ஜீயர் அருளிச் செய்த "ஆறாயிரப்படி குரு பரம்பரையில் உள்ளது. அருளிச் செய்தவர் யார் எனத் தெரியவில்லை. பன்னீராயிரப்படி குருபரம்பரையிலுமுள்ளது.

**இரண்டாவது தனியன் :**

*"நமோ (அ) சிந்த்யாத் புதாக்லிஷ்ட*
*ஜ்ஞாந வைராக்ய ராசயே |*
*நாதாயமுநயே (அ) காத*
*பகவத் பக்திஸிந்த வே ||"*

(பொருள் : இப்படிப்பட்டதென்று நினைக்க முடியாததும், ஆச்சர்யமானதும், பகவானுடைய அருளாலே எளிதாகக் கிடைத்ததுமான, ஞானம் மற்றும் வைராக்ய குவியலாக விளங்குபவராகவும், இறைவனை மனனம் செய்பவராகவும், ஆழ்ந்த பகவத் பக்திக் கடலாகவும், விளங்கும் நாதமுனிகளை வணங்குகிறேன்). இத்தனியனை, ஸ்ரீமந்நாதமுனிகளின் திருப்பேரரான யமுனைத் துறைவர் என்னும் திருப்பெயருடைய ஸ்ரீஆளவந்தார் அருளிச் செய்த "ஸ்தோத்ர ரத்நத்தில்" முதல் சுலோகமாக இடம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

இவர் பெருமையைத் திருவரங்கத்தமுதனார் தம் இராமாநுச நூற்றந்தாதியில் இருபதாம் பாடலில் அருளியுள்ளார்.

*"ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் அமுதத் திருவாய்*
*ஈரத்தமிழின் இசை யுணர்ந்தோர்கட்கு இனியவர் தம்*
*சீரைப் பயின்றுய்யும் சீலங்கொள் நாத முனியை நெஞ்சால்*
*வாரிப்பருகும் இராமாநுசன் என்றன் மாநிதியே."*

மகாசாரியர் கூரத்தாழ்வான் திருக்குமாரர் ஸ்ரீபராசர பட்டர், தாம் அருளிய ஸ்ரீரங்கராஜஸ்தவம் முதற் பகுதியில்

*"நௌமி நாதமுநிம் நாம*
*ஜீமூதம் பக்த்யவக்ரஹே |*
*வைராக்யம் பகவத் தத்வ*
*ஜ்ஞாந பக்த்யபி வர்ஷுகம் ||*

(பக்தியாகிற மழைநீர் பெய்யாமலிருந்த பஞ்ச காலத்தில் வைராக்யம், எம்பெருமானைப் பற்றிய ஜ்ஞா

நபக்திகள் ஆகியவற்றைப் பொழியும் ஸ்ரீமந்நாதமுனிகள் என்னும் கார்முகிலைத் துதிக்கிறேன்.) கவி தார்க்கிக ஸிம்ஹமான ஸ்ரீவேதாந்த தேசிகர் தம் ஸ்ரீயதிராஜ ஸப்ததியில்,

*''நாதேந முநிநாதேந பவேயம்*
*நாதவாநஹம்*
*யஸ்ய நைகமிகம் தத்த்வம்*
*ஹஸ்தாமலக தாம்கதம்''*

(எவருக்கு வேதாந்த விழுப்பொருளான பரப்ரஹ்மம் கையிலங்கு நெல்லிக் கனி ஆயிற்றோ அந்த முனிவர் தலைவரான அந்த நாதமுனிகளாலே அடியேன் நாதன் உடையவனாகக்கடவேன்). இவரைப் பற்றிய துதிகள் பல உள்ளன. விரிவஞ்சி இத்துடன் அமைகிறேன்.

**ஸ்ரீமந் நாதமுனிகள் திருஅவதாரம் :**

ஸ்ரீமந்நாதமுனிகள் திருஅவதாரம் குறித்த செய்திகள் பன்னீராயிரப்படி குரு பரம்பராப்ரபாவத்தில் இடம் பெற்றுள்ளன. ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் பல காரணங்களால் அழிந்து போயின. அப்பொழுது பொதிய மலையில் வாழும் கும்பஸம்பவரும் (அகஸ்த்யரும்), ஆங்கீரஸர் முதலான ருஷிகளும் மதுகைடபர்களிடத்தில் வேதங்களைப் பறிகொடுத்துத் தவித்த நான்முகனைப் போலே துன்புற்றனர். அவர்கள் "திருமலைக்கு எழுந்தருளி திருவேங்கடத்தப்பனைத் திருவடி தொழுது விண்ணப்பம் செய்து கொள்ள, அப்பன் அவர் முறைக்கிரங்கி "கும்பஸம்பவரே! நீர் அஞ்ச வேண்டாம். வீரநாராயணபுரத்தில் மன்னனார் ஸந்நிதியில் நித்ய வாஸம் செய்து கொண்டு அவருக்கு அந்தரங்க பக்தராயிருக்கிற ஈச்வர பட்டாழ்வானுக்கு நம்முடைய அம்சபூதர் ஒருவரை நாதமுனிகள் என்னும் அபிதானத்தால் அவதரிப்பித்து திராவிட வேதங்களைக் கொடுப்பிக்கக் கடவோம்'' என்று திருவாய் மலர்ந்த



ருள, ருஷிகள் அபயமாய் விடைகொண்டு வீரநாராயணபுரத்திற்கு எழுந்தருளி மன்னனாரை அடி பணிந்து ஈச்வர பட்டாழ்வாருக்கு ஸேவை தந்து, திருவேங்கடத்தப்பன் திருவுள்ளமிருக்கும் படியைத் தெரிவித்து அவரால் பஹுக்ருதராய்த் திரும்பி ஸ்வஸ்தானம் சேர்ந்து *''இனி யென் திருக்குறிப்பே''* (பெரியாழ்வார் திருமொழி 5–4–1) என்கிறபடியே ஸ்ரீநிவாசனையே எதிர்பார்த்திருந்தார்கள் (பக்கம் 271). (ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபதிப்பு ஆறாயிரப்படி பன்னீராயிரப்படி குரு பரம்பராப்ரபாவம் ஸ்ரீரங்கம் 2018 ஆண்டு வெளியீடு).

இந்தப்பகுதி மூலம் நம் திருவேங்கடமுடையான் ஸ்ரீவைஷ்ண ஸமூகத்திற்கு எத்தகைய பேரருளைச் செய்திருக்கிறான் என்று என்னும் பொழுது, "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்ற நிலையை நாம் அடைகிறோம்.

பொதிய மலை வாழ் முனிவர்களுக்கு அருகில் பல திவ்ய தேசங்களிருக்க, அவர்கள் வடஎல்லையில் திருவேங்கடமுடையானைப் பற்ற வேண்டிய காரணம் என்ன என்று தேட வேண்டியுள்ளது. திருமங்கையாழ்வார் *''அண்ணா அடியேன் இடரைக் களையாயே'' என்றும் ''வேங்கட மாமலைமேய ஆய னடி யல்லது மற்றறியேனே''* என்றும் திருவேங்கடவனைப் போற்றும் உள்ளப்பாங்கு அம்முனிவர்களிடமிருந்தது என்பது பொருத்தமான காரணம் ஆகும். ஸ்ரீமந்நாதமுனிகள் திருஅவதார நாளைக் கூறும் வடமொழிப்பாடல் வருமாறு :

*ஜ்யேஷ்ட மாஸேத்வ நூராதே*
*ஜாதம் நாதமுநிம் பஜே ।*
*ய: ஸ்ரீசடாரே: ச்ருதவாந்*
*ப்ரபந்த மகிலம் குரோ: ॥*

(ஆனி அநுஷத்தில் அவதரித்தவராய் ஆசார்யரான நம்மாழ்வாரிடமிருந்து எல்லா திவ்ய ப்ரபந்தங்களையும் கேட்டவரான நாதமுனிகளை பக்தியுடன் நினைத்து வணங்குகிறேன்)



**ஸ்ரீமந் நாதமுனிகள் வார்த்தை :**

திருவேங்கடவன் நாதமுனிகள் திரு அவதாரத்தை முன் கூட்டி ரிஷிகளுக்கு உரைத்தாற்போல, இராமாநுஜர் திருஅவதாரத்தை செய்தி ஒன்றின் மூலமாக நாதமுனிகள் வெளிப்படுத்தினார் என்னும் செய்தி வார்த்தா மாலையில் (441) உள்ளது. அச்செய்தி வருமாறு:

“குளம்படியிலே தேங்கினால் குருவி குடித்துப் போம். வீராணத்து ஏரியிலே தேங்கினால் நாடு விளையும்”.

**இதன் கருத்து :**

ஒரு மாட்டின் குளம்பின் அடியிலே தேங்கும் மழை நீர் சில குருவிகள் குடிக்கவே பயன்படும்; அதே மழை நீர் வீரநாராயணபுரம் ஏரியிலே தேங்கினால் நாடு செழிக்கும். விளைச்சல் விளையும்.

**உட்பொருள் :**

இராமாநுசருக்கு முன்பு அமைந்த ஆசார்யர்கள் தமக்கு வேண்டும் சீடர் ஓரொருவருக்கு மட்டுமே உபதேசித்தனர் (குளம்படி நீர் போல் சிலருக்கே பயன் தரும்).

ஆனால் வீரநாராயணபுர ஏரி போன்ற பரந்த உள்ளமுடைய இராமாநுசர் (அவதரிக்கப்போகும் இராமாநுசரால்) செயலால் உலகம் முழுதும் வைணவம் பரவும். இவ்வாறு இராமாநுஜர் அவதரிக்கப் போகும் செய்தியையும் (நம்மாழ்வார் மூலம் அறிந்த செய்தியை) அவரால் உலகம் பெறப்போகும் பயன் பற்றியும் ஸ்ரீமந்நாதமுனிகள் தம் சீடர்க்கு உபதேசித்தார்.

ஸ்ரீமந்நாதமுனிகள், இராமாநுசரை வீராணம் ஏரி போன்றவர் எனக் குறிப்பாகக் கூறினார். அச்செய்தியை இராமாநுசரின் சீடர் எம்பார் என்னும் ஆசார்யர் அல்லவா கீழ்க்காணும் சுலோகத்தில் கூறியுள்ளார்.

*“லக்ஷ்மீ நாதாக்ய ஸிந்தௌ சடரிபு ஜலத:*
*ப்ராப்ய காருண்ய நீரம்*
*நாதாத்ராவப் யஷிஞ்சத் ததநு*
*ரகுவராம் போஜ சக்ஷுர்ஜராப்யாம் ।*
*கத்வா தாம்யாமு நாக்யாம் ஸரிதமத*
*யதீந்த்ராக்ய பத்மாகரேந்த்ரம்*
*ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி*
*பஹுதா தேசிகேந்த்ரப் ரமௌகை: ॥”*

**குறிப்பு :**

லக்ஷ்மி நாதன் – பெருங்கடல்: சடகோபந்–மேகம்; நாதமுனிகள் – மலை; புண்டரீகாக்ஷா, ராமமிச்ரர் – அருவிகள், யாமுனாசார்யர் –ஆறு, பெரிய நம்பி முதலானவர் – கால்வாய்கள், இராமாநுசர் – ஏரி; 74 ஆசாரியர்கள் – மதகுகள்.

*“ராதாபதி ஸரோஜாங்க்ரி*
*ப்ரபந்நாய மஹாத்மநே ।*
*மந்யுக்ஷேத்ர நிவாஸாய*
*முநிநாதாய மங்களம் ॥”*

ஸ்ரீமந்நாதமுனிகள் திருவடிகளே சரணம்.


## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது. ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை** (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) **இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.**

– பிரதான ஆசிரியர்

தாஸ சாகித்யம்

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



தெலுங்கு மூலம் : திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா

**புராணங்களில் திருவேங்கடவன் :**

கலியுக வைகுண்ட நாதனாக புகழ்பெற்ற திருவேங்கடவனை ஹரிதாசர்கள் மெய்மறந்து, பக்தியுடன் புகழ்ந்து பாடி அருளைப் பெற்றனர் என்று புராண இதிகாசங்கள் கூறுகின்றன. திருவேங்கடவன் சதுர்யுக மூர்த்தி, கலியுக கல்யாண சக்கரவர்த்தி. பல அவதாரங்களுக்கு மூலமான இறுதி அவதாரமான அர்ச்சாவதாரம் அவருடையது. *''கலௌ வேங்கடநாயக:''* தேவர், கந்தர்வர், கின்னரக் கிம்புடரர், ரிஷி முனிவர்கள் மற்றும் பக்தர்களால் பூஜிக்கப்பெற்ற மூர்த்தி – திருவேங்கடமுடையானே ஆவார். தேவர்களின் மகுடம் திருவேங்கடவன். ஹரிதாசர்களின் பக்திக்கு உகந்தவர் திருவேங்கடவன். எந்த ஸ்வாமியை வழிபட்டாலும், எந்த தலத்தை கண்டுகளித்தாலும், எந்த சத்கார சன்மானங்கள் செய்தாலும் அனைத்தும் திருவேங்கடவனையேச் சாரும். யக்ஞம் பூர்ணாஹுதியுடன் முடிவடைவது போல திருவேங்கடமுடையானை தரிசித்தாலே போதும் சர்வ பாபபரிஹாரம் ஆகும். அதனால்தான் இப்பாரத தேசத்தில் உள்ள அனைவரும் ஸ்வாமியை வழிபட்டு பக்தியுடன் வணங்குகின்றனர். மேலும் கவிஞர், பாடகர், கலைஞர்கள், பக்தர்கள் அனைவரும் ஸ்வாமியை நினைத்தே தம் காரியங்களை ஆரம்பித்தனர். பல பிறவிகளின் சத்கர்மானுஷ்டான புண்ணிய பலனே இந்த பாரத பூமியில் பிறந்ததற்குக் காரணம் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

*''கலௌது.... ரமே வேங்கடாக்யே மஹீதரே''*

இந்த கலியுக பரதகண்டத்தில் மனிதனாகப் பிறப்பதே சிறந்த பாக்கியம். நாம் செய்த புண்ணிய காரியத்தால் தான் திருவேங்கடவனை தரிசிக்கும் யாத்திரை கிட்டும் என்றும், கருட வாகன அதிபதியான ஸ்ரீஹரி, லக்ஷ்மி தேவியுடன் நிவசிக்கும் உன்னதமான இம்மலை மிகச் சிறந்தது என்றும் பக்தர்கள் எண்ணி தம் யாத்திரையை மேற்கொள்கின்றனர்.

வேதமந்திரங்கள், ரிஷிகள், தேவதைகள் மற்றும் சித்தர்களின் சிறப்பிடம். சரணமடைபவர்களுக்கு நிவாசத் தலம். ஆதிசேஷனின் அவதாரம். இயற்கை அழகை அள்ளித் தரும் மணமிக்க மலர்களும், கூவும் குயில்களும், பழங்களுடன் கூடிய மரங்களும் நிறைந்த வளமிக்க இடம். சாதுக்கள் மற்றும் பயங்கரமான விலங்குகள் வாழும் இடம். பல வண்ண நிறமுடைய

பறவைகளின் இருப்பிடம். ஸ்வாமி புஷ்கரணி, பாபவிநாசனம், ஆகாச கங்கா போன்ற பல தீர்த்தங்கள் உடைய மலையே திருவேங்கட மலை. இங்கே தேவதைகள் மரங்களாகவும், ரிஷிகள் விலங்குகளாகவும், பித்ரு தேவதைகள் பறவைகளாகவும் இருக்கக்கூடிய இவ்விடத்தின் அழகை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாதது.

*''ஏவம் மனோஹர ஸ்ரீமான் பர்வத: புண்யகானன:''* அஞ்சனாத்ரி, ஆனந்தாத்ரி, நீலாத்ரி, வைகுண்டாத்ரி, புஷ்கராத்ரி... என பல பெயர் களால் அழைக்கப்படும் இம்மலை கலியுகத்தில் “வேங்கடாத்ரி” யாக நிலை பெற்றது.

இந்த வேங்கடாத்ரிக்கு இணையாக வேறு எந்த இடமும் இப் பூமியில் இல்லை. அவ்வாறே திருவேங்கடமுடையானுக்கு இணை யாக எந்த ஸ்வாமியையும் காண முடியாது.

இம்மலையின் பெருமையை பிரம்மன், ருத்ரன் மற்றும் இந்திர னாலேயே அறிந்து கொள்ள முடியவில்லை. மனிதராகிய நாம் எவ் வாறு அறிய முடியும்? திருவேங்கடமலையின் பெருமையை எவ் வளவு கூறினாலும் மிகையாகாது. வேங்கட மலையை அடைவதும் அங்கே எழுந்தருளியுள்ள ஸ்ரீநிவாசனை தரிசிப்பதும் நமக்குக் கிடைத்த வரம்.

*''ந தீர்த்தயாத்ரானசதான யக்ஞம்| வ்ரதம் தபோனார்ச்சன*
*மன்யதைவம்|*
*யத் ஸ்ரீநிவாச ஸ்யசனாமகீர்த்தனம்| ததேவ சர்வார்த்த*
*ஸ்வ்ருஷ்டிகாரணம்||'*


தீர்த்த யாத்திரைகள், தானயக்ஞங்கள், விரதங்கள், தவம், அர்ச்சனை ஆகியவற்றால் பெறுகின்ற புண்ணியங்களை விட ஸ்வாமி யின் தரிசனம், நாம சங்கீர்த்தனம் ஆகியவற்றை செய்வதால் மிக்க பலன் கிட்டும். அதுமட்டுமின்றி மேலே கூறப்பட்டுள்ள யாவும் ஸ்ரீநிவாசனின் நாம சங்கீர்த்தனம் செய்வதால் வரும் புண்ணியத்தை விட குறைவே ஆகும் என்று புராணங்கள் கூறுகின்றன.

சகல தேவதைகளின் புண்ணிய தலமான இந்த மலையில் பக்தர் கள் பக்தியுடன் செய்யும் நற்காரியங்களுக்கு நன்மை கிட்டும்.

*''புன்யோயம் .... புதாஸ்ஸர்வான்கா மான வாப்னயாத்''*

பல தீர்த்தங்களின் நிலையமான, பக்தர்களின் வழிபாட்டுத் தல மான இம்மலையில் தங்கம், அன்னம், தாம்பூலம், குளிர்ந்த நீர் ஆகிய வற்றை தானங்கள் செய்து ஸ்வாமியின் அருளைப் பெறலாம் என்று சொல்லப்படுகின்றன.

புராண இதிகாசங்களால் அழகாக வருணிக்கப்பட்ட இத்தலத் தைத் தரிசிப்பதால் அனைத்து பாவங்களும் நீங்கி புண்ணியம் கிட்டும். அதுமட்டுமின்றி பக்தி, ஐச்வர்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய பல குணங்களுடன் நிரம்பியுள்ளது.



பூலோக வைகுண்டமே வேங்கடாத்ரி. அங்கே எழுந்தருளிய ஸ்வாமியே திருவேங் கடவன். தேவதைகளாலோ, விஷ்வகர்மா வாலோ ஸ்ருஷ்டிக்கப்பட்டவர் அல்ல. இவர் சுயம்புவாக எழுந்தருளியவர்.பிறப்பின் புண்ணியபலனே இந்த ரமாநாதனான திருவேங்கடவனின் தரிசனம். அதன் மூலம் சகல நன்மைகளையும் அடைவோம்.

ஏழு மலையை ஏறி அங்கே எழுந்தரு ளியுள்ள திருவேங்கடவனை தரிசித்து அருள் பெறுக.

தொடரும்...



வந்தே பத்மகராம் ப்ரஸந்நவதனாம் ஸௌபாக்யதாம் பாக்யதாம்
ஹஸ்தாப்யா மபயப்ரதாம் மணிகணைர்நா நாவிதைர்பூஷிதாம்
பக்தாபீஷ்ட பலப்ரதாம் ஹரிஹரப்ரஹ்மாதிபிஸ்ஸேவிதாம்
பார்ஸ்வே பங்கஜ சங்க பத்மநிதி பிர்யுக்தாம் ஸதா ஸக்திபி:

ஸரஸிஜநயநே ஸரோஜஹஸ்தே
தவளதராம்ஸுக கந்தமால்ய சோபே
பகவதி ஹரிவல்லபே மநோஜ்ஞே
த்ரிபுவநபூதிகரி ப்ரஸீத மஹ்யம்

- ஸ்ரீலக்ஷ்மி அஷ்டோத்திரம் (த்யானம்)

# ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் திருமலையில் துவங்கின திருவேங்கடவனின் தரிசன பாக்ய திருக்காட்சிகள்
































# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



திருவேங்கடமுடையானின் ஆலயத்தில் சாத்திரமுறைப்படி ஆனிவர ஆஸ்தானம் நடைபெற்றது. ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சின்ன ஜீயர் ஸ்வாமிகள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி தம்பதியினர், செயலாட்சித் தலைவர் திரு. அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ்., கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி தம்பதியினர் மற்றும் உயர் அதிகாரிகளும் பங்கு கொண்டனர்







கொரோனா தொற்று நசிந்து உலகம் ஆயுள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென பிரார்த்தனை செய்து தி.தி.தே. நிர்வகித்த இராகுகிரக சூடாமணி சூர்ய கிரகண ஜபயக்ஞும்



# வரங்களை வாரி வழங்கும் வரலக்ஷ்மி தேவி

– திருமதி பா. காயத்ரி, கேரளா, 97446 57115.

வரலக்ஷ்மி தேவி என்றாலே மாங்கல்ய பலம், குடும்பத்தின் ஆரோக்கியம், ஐச்வர்யம் முதலியவைதான் நினைவுக்கு வரும். வரங்களை வாரி வழங்கும் இத்தேவியை சிறப்பிக்கும் வகையில் எல்லா ஆண்டும் “வரலக்ஷ்மி விரதம்” முக்கியமாக தென் இந்தியாவில் அதுவும் தமிழ்நாடு, மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கானா முதலிய மாநிலங்களில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

வரலக்ஷ்மியை வழிபட்டால் அஷ்ட லக்ஷ்மிகளையும் (அதாவது ஆதி லக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி, தைர்ய லக்ஷ்மி, கஜ லக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, விஜய லக்ஷ்மி, வித்யா லக்ஷ்மி, தன லக்ஷ்மி) வழிபட்டதற்கான அருளும், பலனும் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

இவ்விரதம் ஸ்கந்த புராணத்திலும் இடம் பெற்றுள்ளது.

புராணத்தின்படி ஒருமுறை பார்வதி தேவி பரமசிவனிடம், பெண்கள் எந்த விரதம் எப்படி செய்தால் புத்திர பௌத்திராதி, சகல சம்பத்துண்டாகி, சுகம் அடைவார்கள் என்று கேட்க, மகாதேவனும் வரலக்ஷ்மி விரதம் பற்றிக் கூறி, பின்வரும் கதையைக் கூறுகிறார்.

பண்டு, மகத தேசத்தில் குண்டினபுரம் என்ற பட்டிணத்தில் “சாருமதி” என்ற பிராமண ஸ்திரீ வாழ்ந்து வந்தாள். அவள் ஒரு பதிவ்ரதை. தன் கணவனையே தெய்வமாகக் கருதி அவருக்கும், அவரது பெற்றோருக்கும் பக்தியுடன் சேவை செய்து வந்தாள். அவளது நன்நடத்தையால் அகம் மகிழ்ந்த லக்ஷ்மி தேவி, அவளை அனுக்ரஹிக்க நினைத்து, அவள் கனவில் தோன்றி, வரலக்ஷ்மி விரதத்தைப் பற்றியும், அதன் வழிமுறைகளைப் பற்றியும் கூறி, அதனை அனுஷ்டிக்கச் சொல்லி மறைந்தார்.

காலையில் எழுந்த சாருமதி, நடந்ததைக் கூற அவள் குடும்பத்த வரும் அவளை விரதத்தை அனுஷ்டிக்குமாறு கூறினர். அவளும் தனது கிராமத்தில் உள்ள பெண்களை வரவழைத்து விரதத்தை செய்து முடித்தாள். அக்ஷணமே, அங்கு குழுமியிருந்த பெண்கள் அனைவரின் உடலிலும் தங்க ஆபரணங்கள் தோன்றின. அவர் கள் அனைவரது வீடுகளிலும் செல்வம் நிறைந்தது. அனைத்து பெண்களும் சாருமதிக்கு நன்றி தெரிவித்து விடை பெற்று பின்பு எல்லா வருடமும் அவ்விரதத்தை அனுஷ்டித்தனர்.

இன்னொரு கதையின்படி–சித்திரநேமி என்ற தேவகுலப் பெண் நீதிபதி, ஒரு முறை நீதி தவறி தீர்ப்பு வழங்கியதால் கோபப்பட்ட பார்வதி தேவி அவளை குஷ்டரோகியாகும்படி சபித்தார். சாபவிமோசனம் கேட்டு சித்திரநேமி மன்றாடிய





போது, தேவி அவளை “வரலக்ஷ்மி விரதத்தை கடைப் பிடித்தால் நோய் நீங்கும்” என்று கூற, அவளும் பூலோ கத்தில் ஒரு குளக்கரையில் அமர்ந்து பூஜை செய்து, சாபவிமோசனம் பெற்றாள்.

இவ்விரதம் ச்ரவண (ஆடி–ஆவணி) மாதம், பூர்வ பக்ஷம் அல்லது சுக்கிலபக்ஷம் பருவத்திற்கு முன்னே வரும் வெள்ளிக்கிழமையன்று அனுஷ்டிக்க வேண்டும் என்பது ஐதீகம். அந்நாளில் விரதம் இருந்து பூஜை செய்து, சுமங்கலிப் பெண்களை தன் வீட்டில் அழைத்து மஞ்சள், குங்குமம் முதலிய மங்கலப் பொருட்கள் நிறைந்த தாம்பூலத்தை கொடுப்பார்கள்.

இந்த புனிதமான வரலக்ஷ்மி நாளன்று, திரு மலையப்ப ஸ்வாமியின் பட்டத்து மகாராணியான ஸ்ரீஅலர்மேல் மங்கை தாயார் திருக்கோயிலில் ஸ்ரீவர லக்ஷ்மி விரதத்தை ஆண்டுதோறும் மிகவும் சிறந்த முறையில் பொதுவாக கலசம் வைத்து கொண்டாடுவர்.

அன்றைய தினம் திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் கோயில் மிகவும் சிறந்த முறையில் அலங்க ரிக்கப்படும். தாயாருக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்படுவதும் சிறப்பான ஒன்றாகும். இவ்வாறு அனைத்து செல்வங்களையும் கொடுக்கும் ஸ்ரீவரலக்ஷ்மி விரதத்தில் நாம் அனைவரும் பங்கு கொண்டு தாயாரின் திருவருளுக்குப் பாத்திரமாவோம்.

## மஹாலக்ஷ்மி ஸ்தோத்ரம்

*ஆபந்நார்த்தி ப்ரசமந விதௌ*
*பத்த தீக்ஷஸ்ய விஷ்ணோ:*
*ஆசக்க்யுஸ் த்வாம் ப்ரிய ஸஹசரீ*
*மைகமத்யோபபந்நாம் |*
*ப்ராதுர்ப்பாவைரபீ ஸம தநு:*
*ப்ராத்வமந்வீயஸே த்வம்*
*தூரோத்க்ஷிப்தைரிவ மதுரதா*
*துக்தராசேஸ் தரங்கை: ||*

**ஆபத்தையடைந்தவர்களின் துன்பத்தை ஒழிக்கும் செயலில் விரதங்கொண்ட எம்பெருமானுக்கு உன்னை மன ஒற்றுமையோடு கூடிய பிரியமான துணையாக வேதங்கள் கூறின. தூரத்தில் வீசிய திருப்பாற்கடலின் அலைகளுடன் இனிய சுவை போல் நீ அவதாரங்களாலும் ஒத்த திருமேனியுடையளாய் ஒற்றுமையாக தொடருகின்றாய்**

*– ஸ்ரீ ஸ்துதி–10*






# திருவேங்கடவன் திருப்பள்ளியெழுச்சி

– உ.வே. கே.பி. தேவராஜன் ஸ்வாமி, சென்னை, 944062433.

அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடம் குணானுபவமும் கைங்கர்யமும் ஒவ்வொரு வைஷ்ணவாதிகாரிக்கும் அவசியம் இருக்க வேண்டியதொன்றாம். பிள்ளைலோகாசார்யா முமுக்ஷுப்படி த்வய ப்ரகரண ஆரம்பத்தில் *''இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணானுபவ கைங்கர்யங்களே போதுபோக்காகையும்''* என்றுள்ள ஸ்ரீஸுக்திகள் அநுஸந்திக்க உரியவை. அவை பெருமாளுக்குக் கோபுர ப்ராகார மண்டபாதிகள் நிர்மித்தல், திருவாராதநம் சமர்ப்பித்தல், போனகம் சமர்ப்பித்தல், திருவிளக்கெரிக்கை, திருமாலை கட்டுகை, கோயிலை சுத்தம் செய்கை. கோயிலை அலங்கரிக்கை. வேதம் திவ்யப்ரபந்தம் முதலானவற்றை எம்பெருமான் செவி குளிரக் கேட்கும்படி ஓதுகை. நாட்டியம், பாடல் வாத்தியங்களால் எம்பெருமானை உகப்பித்தல் முதலான பலவகைப்பட்ட கைங்கர்யங்களாம்.

அப்படிச் செய்கையில் எம்பெருமானுக்கு சமர்ப்பிக்கப்படும் உபசாரங்களில் அவனை ஒரு மஹாராஜாவாகவே கொண்டு சமர்ப்பிக்க வேண்டும். உறக்கமற்ற எம்பெருமானுக்குத் துயிலுணர்த்துதல் என்பதொன்றுண்டோ என்கிற வினாவெழுகிறது. உண்மையில் பகவான் நாராயணன் பரமஸாத்விக மூர்த்தி. அவன் வீற்றிருக்குமிடம் ''ரஜஸ: பராகே'' என்றும் ''தமஸ: பரஸ்தாத்'' என்றும் ரஜஸ்தமஸ்ஸுக்களைக் கடந்துள்ள சுத்த ஸத்வமயமான பரமபதமாம் வைகுண்ட லோகத்தில் இருப்பவன்.

அவனுக்குத் தமோகுண கார்யமான உறக்கம் என்பது ஒரு நாளும் இல்லை. ஆயினும் அர்ச்சாவதாரத்தில் ஒரு மஹாராஜாவைப் போல எம்பெருமானை எண்ணி விடியற்காலையில் அவனைத் துயிலுணர்த்துதல் என்னும் திருப்பள்ளியெழுச்சி பாடுதலும் ஒரு பெருந்தொண்டான படியால் ஸுப்ரபாதம் பாடப்படுகிறது.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் மூவரை திருப்பள்ளி எழுச்சிப் பாடியவர்களாக எடுத்து, மேலும் ஒருவரையும் காட்டுகிறார். மந்திரம் கொள் மறைமுனிவன் வேள்விகாக்க ஸ்ரீராமபிரான் விச்வாமித்ரருடன் சென்றபோது, கங்கைக் கரையில் இரவில் உறங்கின ஸ்ரீராமபிரானை விச்வாமித்ரர் விடியற்காலையில், அநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்லி, போது விடிந்தமையையும் கூறி எழுப்பின ப்ரஸித்தமான சுலோகம்.

*''கௌஸல்யா ஸுப்ரஜாராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே*
*உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்''*

என்பது பகவானுக்கு முதன்முதலில் சமர்ப்பிக்கப்பட்ட திருப்பள்ளியெழுச்சியாகும். இதன் பொருள் வருமாறு... ''கோசலையின் நன்மகனே. மனிதப்புலியே பொழுது புலர்ந்து விட்டது. தெய்வத்துக்குரிய காலைக் கடன்களை செய்யப்பட வேண்டும் துயிலுணர்வாயாக'' இது வேங்கடேச ஸுப்ரபாதத்தின் தொடக்கத்தில் அநுஸந்திக்கப்பட்டுவரும் சுலோகமாகும்.

அடுத்ததாக, பெரியாழ்வார், யசோதையின் பாவனையில், கண்ணன் இரவில் பாலமுதுண்ணாமல் உறங்கி விட்டு மறுநாளும் வெகுநேரம் தூங்கிக் கொண்டிருந்தமையால் யசோதை பரிவால் கூறும் வார்த்தை மற்றொரு திருப்பள்ளியெழுச்சியாகும்.

*"அரவணையாய்! ஆயரேறே! அம்மமுண்ணத்*
*துயிலெழாயே*
*இரவு முண்ணாதுறங்கி நீபோய் இன்றுமுச்சிக்*
*கொண்டதாலோ"*

என்கிறாள். கண்ணா இரவில் உண்ணாமல் உறங்கி விட்டாய். இப்பொழுது சூரியன் உச்சிப்பட்டுவிட்டான். விரைவில் எழுந்து பாலமுதுண்பாயாக என்று கண்ணனைத் துயிலுணர்த்தினார் யசோதையின் பாவனையில் பெரியாழ்வார்.

மூன்றாமவராகத் தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தெம்பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி என்றொரு பத்துப்பாட்டுகள் அடங்கிய ப்ரபந்தமே அருளிச் செய்துள்ளார். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் *"அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே"* என்றுள்ளது காணலாம்.

அடுத்ததாக நம்பாடுவான் என்ற பாகவதரும் திருக்குறுங்குடி நம்பிக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடின சரித்திரம் "கைசிக மஹாத்மியம்" ஸ்ரீவராஹ புராணத்தில் பரக்கபேசப்பட்டுள்ளது. இப்புராணம் கைசிக ஏகாதசியிரவில் (த்வாதசி விடியற்காலையில்) பல திவ்ய தேசங்களில் வாசிக்கப்படுகிறது. மேற்கூறிய விவரங்களால் பெருமானுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடுவது என்பது மிகச் சிறந்த கைங்கர்யம் என்றும், அது பல பெரியவர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்தபடியால் சிஷ்டாசாரஸித்தம் என்றும் தேறுகிறது.

மாமுனிகளின் அஷ்ட திக்கஜ சிஷ்யர்களில் ஒருவரான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவினிடம் திருவேங்கடமுடையானுக்கு ஸுப்ரபாதாதிகள் பண்ணவேண்டும் என மாமுனிகள் நியமிக்க, அதனைச் சிரமேற்கொண்டு ஸ்ரீப்ரதி வாதிபயங்கரம் அண்ணா வேங்கடேச ஸுப்ரபாதம், வேங்க டேச ஸ்தோத்தரம். வேங்கடேச ப்ரபத்தி, வேங்கடேச மங்களம் ஆகியவற்றை அருளினார். அவற்றுள் ஸ்ரீவேங்கடேச ஸுப்ரபாதத்தின் தாத்பர்யத்தையும், பெருமையையும் ஈண்டு நோக்குவோம்.


இந்நூல் இருபத்தொன்பது சுலோகங்களைக் கொண்டது. இவற்றில் முதல் சுலோகம் இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயண சுலோகம் என்பதை முன்னமே கண்டோம். இரண்டாம் சுலோகம் புராணச்லோகமாகும். இவ்விரண்டு சுலோகங்களிலும், ஸ்ரீராமபிரானுக்கும் (கோவிந்தன்), கண்ணபிரானுக்கும் ஸுப்ரபாதம் பாடப்படுகிறது. அதாவது திருவேங்கடமுடையானே ஸ்ரீராமபிரானும் கண்ணபிரானுமாவார் என்றபடி. மூன்று நான்காம் சுலோகங்களில் ஸ்ரீமஹாலக்ஷ்மி நாச்சியாருக்குத் திருப்பள்ளியெழுச்சியாகும். ஐந்தாம் சுலோகம் முதல் இருபத்தெட்டாம் சுலோகம் வரை தாம் பெருமானுக்கு ஸுப்ரபாதம் பாடி, இருபத்தொன்பதாம் சுலோகத்தில் இந்த க்ரந்தத்தைப் படிப்பார்க்குப் பலன் கூறுகிறார் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா.



இனி சில சுலோகங்களை நோக்குவோம். சிறுச்சிறிதே மலர்ந்து கொண்டிருக்கும் முளரி போன்ற மலர்களின் மணம் கொண்டு மென் காற்று வீசுகின்றது. சேஷமலை உச்சியில் விளங்கும் எம்பெருமானே நீ துயிலுணர்வாயாக. திருவேங்கடவர் "கூட்டிலிருந்து கிளி எப்போதும் கோவிந்தா கோவிந்தா என்றழைக்கும்" என்கிற க்ரமத்தில் உன் திருநாமம் கூறுவதற்காக கூடுகளில் உள்ள விளையாட்டுக் கிளிகள் தம்மிரு கண்களையும் மலர்த்தி, நீ இரவு அமுது செய்த க்ஷீராந்நம் முதலான இன்னடிசில்களை உண்டு இனிமையாக உன் நாமங்களைக் கூறுகின்றன. அவற்றைத் திருச்செவிசாத்த சேஷமலை உச்சியில் விளங்கும் எம்பெருமானே நீ துயிலுணர்வாயாக.

எப்பொழுதும் ஸஞ்சரித்துக் கொண்டேயிருக்கும் நாரதரும்கூட வீணையும் கையுமாக நின் கோயில் வாசலில் நின்றுகொண்டு உன்னுடைய முடிவற்ற சரித்திரத்தைப் பாடிக் கொண்டிருக்கிறார். அதனைத் திருச்செவிசாத்த சேஷமலை உச்சியில் விளங்கும் எம்பெருமானே நீ துயிலுணர்வாயாக.

வேண்டுவோர்க்கு வேண்டுமவற்றையளிக்கும் வரதனே, அனைத்துலகுக்கும் உறவினனே, ஸ்ரீநிவாஸனே, உலகின் ஒப்பற்ற கருணைக் கடலே. ஸ்ரீமஹாலக்ஷ்மி நாச்சியார் நிலைக்கப் பெற்ற திவ்ய ரூபனே, திருவேங்கடமலைத் தேவனே துயிலுணர்வாயாக.



கோனேரியாம் ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி தூய உடல் பெற்றவர்களாயும், உன்னிடம் நன்மையை விரும்பி வந்தவர்களாயும் உள்ள பரமசிவனார், பிரம்மா, இந்திரன் முதலான தேவர்களும் உன் வாயிலில் தலை வணங்கி நிற்கிறார்கள். திருவேங்கடமலைத் தேவனே துயிலுணர்வாயாக. காமனின் கர்வமழிக்கும் அழகுடையவனே, திவ்யமான வடிவுபடைத்தவனே. ஸ்ரீமஹாலக்ஷ்மிநாச்சியாரின் அணைப்பிலிருப்பவனே. மங்களகரமானவையும். குற்றங்களற்றவையுமான திருக்கல்யாண குணங்களாலுண்டான புகழ் படைத்தவனே திருவேங்கடமலைத் தேவனே துயிலுணர்வாயாக.

"மீனோடாமை கேழல் அரி குறளாய் முன்னுமிராமனாய்த் தானாய்ப் பின்னுமிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கி"யுமாகப் பல அவதாரங்கள் எடுப்பவனே, திருவேங்கடமலைத் தேவனே துயிலுணர்வாயாக. வேதவிற்பன்னர்களில் தலைவர்களாக உள்ளவர்கள் உன் திருமஞ்சனத்துக்காகவும், திருவாராதனத்துக்காகவும் பொற்குடங்களில் ஆகாசகங்கையின் தீர்த்தத்தினை ஏலம் லவங்கம் முதலான வாசனைத் திரவியங்களால் பூரித்துக் காத்திருக்கின்றனர். திருவேங்கடமலைத் தேவனே துயிலுணர்வாயாக.

அலர்மேல் மங்கை உறைமார்பனே, குற்றமற்ற குணங்களுக்குக் கடலானவனே, ஸம்ஸாரக் கடலைக் கடக்க உள்ள ஒரே ஸேதுவே, வேதாந்தத்தால் அறியப்படும் பெருமையுடையவனே, பக்தர்களுக்கு இனியவனே, திருவேங்கட மலைத் தேவனே துயிலுணர்வாயாக.



இவ்வண்ணம் திருவேங்கடமுடையானின் ஸுப்ரபாதத்தை எந்த மனிதர்கள் விடியற்காலையில் படிக்கிறார்களோ அவர்கள் பரம் பொருளைப் பற்றின நல் ஞானத்தை அடையப் பெறுவர்.

இந்த ஸுப்ரபாத ப்ரபந்தத்தால் திருவேங்கடமுடையானே, வேத வேத்யன், ஸ்ரீயபதி. ஸகல தேவதா ஸார்வபௌமன். அனைத்துலகுக்கும் பிரான், திவ்ய மங்கள விக்ரகத்துடன் கூடியவன். கருட வாகனன். சேஷசாயி. மோக்ஷமுள்ளிட்ட ஸகல பலப்ரதன், ஏகமாத்ர உபாய பூதன், பரம ப்ராப்யன். அவனுக்குச் செய்யும் தொண்டே மேலான பலன் என்று அறுதியிடப் பெற்றது.

ஒவ்வொரு சுலோகத்திலும் பற்பல விசேஷ வேதாந்தார்த் தங்கள் பெரியோர்களால் அருளப் பெற்றுள்ளன. விரிவஞ்சி விடைகொள்கிறேன்.



துளசி (திருத்துழாய்) என்பது தன்னிகரற்றது என்று பொருளாகும். துளசி செடியின் நுனியில் பிரம்மாவும், மத்தியில் விஷ்ணுவும், அடியில் சிவனும், மற்ற பகுதிகளில் முப்பத்து மூன்று கோடி தேவர்கள், பன்னிரண்டு சூரியர்கள், எட்டு வசுக்கள், இரு அசுவினி தேவர்கள், பதினொரு ருத்ரர்கள், இருப்பதாக ஐதீகம்.

**துளசியின் மகிமை :**

ஒரு துளசி இலை அபிஷேக அர்ச்சனை, ஆயிரம் குடம் அமிர்தம் அபிஷேகமாகும். துளசி நீரை உட்கொள்வது, லட்சம் அஸ்வமேத யாகத்தின் பலன். துளசி மாலையணிந்து கையில் பிடித்து ஜெபிக்க, ஆயிரம் அஸ்வமேதயாக பலன். ஆலயங்களில் தரும் துளசியை அருந்துபவர்கள் சத்ய நாராயண பூஜை செய்த நற்பலனைப் பெறுவர்.

தானம் கொடுக்கும் போது துளசியும் சேர்த்து கொடுத்தால், இரட்டிப்பு பலன் உண்டு. மரண வேளையில், துளசி தீர்த்தம் அருந்தினால் விஷ்ணு லோகம் கிட்டும்.

**துளசியினை பூஜித்து பலன் பெற்றவர்கள் :**

துளசியை பூஜித்து, பார்வதி தேவி சிவனின் இடது பாகம் பெற்றாள். அருந்ததி தேவி வசிஷ்டரை மணந்தாள். ருக்மணி கிருஷ்ணரை மணவாளராக அடைந்தார். கருட பகவான் விஷ்ணுவிற்கு வாகனமானார். சாவித்திரி தீர்க்க சுமங்கலி ஆனாள். விநாயகர், கஜாமுகசூரனை வென்று விக்னேஷ்வரரானார். ருக்மணி, சத்யபாமாவை துலா பாரத்தில், பொன்னிற்கும் மேலாக துளசியால் வென்றாள்.

**துளசிக்கல்யாணம் :**

கார்த்திகை மாதம், ஏகாதசிக்கு மறுநாள் துவாதசி அன்று, மகாவிஷ்ணு, துளசியைத் திருமணம் செய்தார். அந்நாள் பிருந்தாவன துளசியாகவும், துளசிக் கல்யாணம் ஆகும். அன்றைய தினம் சுமங்கலிப் பெண்கள், துளசி மாடத்தை (துளசியை) நெய்தீபம் ஏற்றி, சிறப்பு வழிபாடு செய்தால் நற்பலன் கிட்டும்.

**துளசியினை பறிக்கும்போது சொல்ல வேண்டியது :**

அதிகாலையிலும், சனிக்கிழமைகளிலும், விரல் நகம் படாமல் பறிக்க வேண்டும். பூமி பெற்றெடுத்த பாக்கியமே! நிரந்தரமான மோட்சத்தை அடைய வேண்டி, ஸ்ரீமந்நாராயணன் முதலான எல்லா தேவதைகளையும், எல்லா ஆசார்ய புருஷர்களையும், பூஜிப்பதற்காக துளசி பத்திரத்தை பறிக்கிறேன். என் செயலை மன்னிப்பாயாக என வேண்டவும்.



**துளசி மாலை தொடுக்கும் போது :**

ஹரே கிருஷ்ணா ஹரே ராமா, ஓம் நமோ நாராயணாய நம என வேண்டுதல் சிறப்பாகும்.

# துளசியின் மகிமை

– பாப்பான்குளம் பெ.பிச்சையா, சென்னை, 9003105923.



**துளசியின் பெயர்கள்**

பிருந்தா, பிருந்தாவனி, விஸ்வபூஜிதா, விஸ்வ பாவணீ,புஷ்பஸாரா, நந்தினி, சதுளஸி, கிருஷ்ண ஜீவன், திருத்துழாய், துளபம், சுகந்தா, துளுவம், வைஷ்ணவி, லட்சுமி, கவுரி, மாதவி, ஹரிப்பிரியா, அம்ருதா, சுரபி, பிருந்தை

**துளசியை மனதில் நினைத்து வேண்டுவது :**

ஏதந் நாமாஷ்டகம் சைவ (எவ) ஸ்தோத்ரம் நாமார்த்த சம்யுதம்! ய படேத் தாம்ச சம்பூஜ்ய அஸ்வ மேத பலம் ஸ்பேத்!! என வணங்கினால் எல்லா வளமும் கிட்டும்.

**துளசியை (இலையை) பறிக்கக்கூடாத காலங்கள் :**

திருவோண நட்சத்திரம், ஏகாதசி திதி, சப்தமி, அஷ்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, தமிழ் மாதப் பிறப்பு, மதியம், இரவு, சந்தி, ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளி, கிரகண காலம், பிரதோஷம் காலங்களில் பறிக்கக்கூடாது.

**துளசியும் அதற்கு நிகரானதும் :**

துளசியை மூன்று நாட்கள் வைத்திருந்து, பூஜைக்கு உபயோகிக்கலாம். துளசிக்கு பதிலாக, துளசித் தண்டும், அல்லது வேரும், அல்லது துளசி செடியின் அடிப்பகுதியின் மண்ணும், அதுவும் இல்லையென்றாலும் துளசி என்று மனதில் நினைத்து, உச்சரித்து வேண்டினாலும் பலன் கிட்டும்.

**துளசி வழிபாட்டிற்கு உகந்த காலம் :**

தினமும், வழிபடுவது சிறப்பு, கார்த்திகை மாதப் பௌர்ணமி, தை மாதம் வெள்ளிக்கிழமை, மாசி மாத சுக்லபக்ஷ துவாதசி, பங்குனி அமாவாசை–பௌர்ணமி, ஆனி மாத சுக்ல பட்ச தசமி, மார்கழி மாதம் விடியற்காலை நேரம் வழிபடுவது வாழ்வின் சிறப்பாகும்.

**துளசியும் உடல் நலமும் :**

துளசியில் புரதம், கார்போ ஹைட்ரேட் அமிலம், உலோகச் சத்துகளும் உள்ளது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். துளசி, தலைவலி, இருமல், தேமல், சைனஸ், காய்ச்சல், மாதவிடாய் கோளாறு, வாந்தி, விஷக்கடி மேலும் பலவற்றையும் குணமாக்க வல்லது. நாமும் துளசி மாடம் அமைத்து, துளசியை பேணுவோம். வழிபடுவோம். வாழ்வில், வளமும் நலமும் பெற்று மகிழ்வோம்.

## திருமலையப்பனுக்கு ஆனிவர ஆஸ்தானம்

**திருவேங்கடமுடையானின் வருடாந்திர கணக்குகள் ஆடி மாதத்தின் முதல் நாளில் ஆரம்பமாகின்றன. இந்த முதல் நாளில் நடத்தப்படும் உத்ஸவத்தை தெலுங்கில் ஆனிவர ஆஸ்தானம் என்றும், தமிழில் ஆடிப் பூஜை என்றும் அழைக்கப்படுகிறது. "திரு ஆண்டு எழுத்து இடும் போது" (அதாவது வருட ஆரம்பம்) எனும் சொல் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. திருவேங்கடமுடையானுக்கு வருடம் முழுவதும் கிடைக்கின்ற வருமான கணக்குகளை ஒப்படைத்து, மீண்டும் புதிய கணக்குகளை இந்நாள் முதல் துவங்குவர்.**

**16–07–1843–ல் ஆலய நிர்வாகம் ஆங்கிலேயர்களிடமிருந்து மகந்துக்களிடம் ஒப்படைக்கப்பட்ட நாளே இந்நாளாகும். அதன் அடையாளமாகவே இந்த ஆஸ்தானம் அன்று முதல் இன்று வரை தங்கு தடையின்றி நடத்தப்பட்டு வருகிறன்றது. மகந்துக்களின் 90 வருட நிர்வாகத்திற்குப் பின்னர் பொறுப்பாண்மைக் குழுவிடம் நிர்வாகம் வந்த பிறகு பட்ஜெட் ஏப்ரல்–மார்ச் என்று மாற்றப்பட்ட பின்னரும் ஆடி முதல் நாள் இந்த ஆஸ்தானம் நடத்தப்பட்டு வருகின்றது.**

**பதகவிதா பிதாமகர்**

# அன்னமய்யா வாழ்க்கை வரலாறு









## திருமலையானின் தரிசனம் :

இரட்டிப்பு உற்சாகத்துடன் அன்னமய்யா திருமலை வந்தடைந்தார். முதலில் புஷ்கரணியை வலம் வந்து, அதில் புனித நீராடினார். ஸ்வாமி புஷ்கரணியின் அழகைக் கண்ட அன்னமய்யா இதயம் வெள்ளைத் தாமரைப் போன்று மலர்ந்தது. ஆனந்தம் அலைமோத வராஹ ஸ்வாமி ஆலயத்தை வலம் வந்து, வராஹ ஸ்வாமியை தரிசித்துக் கொண்டார். பூவராஹ ஸ்வாமியை தரிசனம் செய்தபின் பூலோக வைகுண்டமான திருவேங்கடவன் ஆலயத்தை தரிசிக்கக் கிளம்பினார். ஆனந்த நிலையத்தில் அமர்ந்திருக்கும் ஆனந்த மூர்த்தியை தரிசிக்கப் பிரதான வாயிலைக் கடந்து, கருட ஸ்தம்பத்திற்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். பிராகாரத்தை வலம் வந்தார். அங்கு மடைப் பள்ளியிலிருந்து வரும் நெய் வாசனையை நுகர்ந்து கொண்டே சென்றவர், “ஸ்ரீ ஹரி பல்வேறு ருசிகளையுடைய பலவித ஆகாரங்களை தினமும் அலர்மேல்மங்கை தாயார் பரிவுடன் பரிமாற புசித்து, காத்திருக்கும் உன் தாசர்களுக்காக மீதி வைத்திருக்க வேண்டும்” *‘‘ஏ பொத்து சூசின…’’* என்று பாடியவாறே பிரதட்சிணம் செய்து யோக நரசிம்மர், ஸ்ரீராமாநுஜர் சந்நிதிகளை வணங்கி, தெய்வீக ஒளி வீசும் ஆனந்த நிலையத்தைக் கண்ணாரக் கண்டு ஆனந்தித்தார். அடுத்து வாகன மண்டபத்தில் ஸ்வாமி புறப்பாட்டிற்காக, அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த அஸ்வ வாகனம், கருட வாகனம், சேஷ வாகனங்களைத் தரிசித்தார்.

நித்ய கல்யாண மூர்த்தியான ஸ்ரீநிவாசனின் கல்யாணம் நடைபெறுகின்ற கல்யாண மண்டபத்தை தரிசித்தார். பக்தர்கள் தங்கள் காணிக்கைகளை சமர்ப்பிக்கும் “ஸ்ரீவாரி உண்டியலை” வலம் வந்து, தனது மேல் வஸ்திரத்தில் முடித்து வைத்திருந்த காசுகளை சமர்ப்பித்தார்.




## திருவேங்கடவனின் தரிசனம் :

பிறகு, தங்க வாயிலைக் கடந்து ஸ்ரீநிவாசனின் திவ்ய மங்கள வடிவினை தரிசனம் செய்தார். “தளதளவென ஒளி விடும் சங்கு சக்கரங்கள் மேல் இரு கைகளில் ஏந்தி, நாபியில் மாணிக்கங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மாணிக்கத்தை, நந்தகம் ஏந்தி, வரத ஹஸ்தத்தைக் காட்டி நிற்பவரை, சிறு மணிகளால் அலங்கரிக்கப்பட்ட பாதங்கள் உடையவரை, மணிமயமான செவி அணிகலன்களின் ஒளி முகத்தில் வீச, தாமரை மலர்களை ஒத்த சிறு நகையுடன் கூடிய முகத்துடன் நிற்பவரை, விலையுயர்ந்த முத்துகளை ஊர்த்துவ புண்டரமாக நெற்றியில் அணிந்தவரை,

தகதகவென ஒளிரும் இரத்தினக்கிரீடம் அணிந்தவரை, ஸ்ரீவத்ஸாங்கம் கௌஸ்துபம் அணிந்த அந்த திவ்ய மங்கள ரூபம் உடையவரை அன்ன மய்யா கண்ணாரக் கண்டு மெய் சிலிர்த்து கீர்த்தனைகளால் போற்றி **''கண்டி நய்ய கிலாண்ட கர்தநே நதிகும்....''** என துதித்தார். "கண்டேன்! அகிலாண்ட கோடி நாயகனைக் கண்ணாரக் கண்டேன்!" என்று ஆனந்தித் தார்.

''புருஷோத்தமா! புஷ்கரிணீ தட நிவாஸா, ஸ்ரீநி வாசா! எங்களைக் காப்பாற்ற வந்த குல தெய்வமே! எங்கள் முன் னோர்கள் எங்களுக்களித்த மகாதன மல்லவா நீ! எங்கள் ஆத்ம தாகத்தைத் தணிக்க வந்த காள மேகம் போன்றவனே! எங்கள் சித்தத்தில் நிறைந்திருக்கும் ஸ்ரீநிவாசனே! உன்னைக் கண்ணாரக் கண்டேன்!" **''பொடகண்டிமய்ய மிம்மு புரு ஷோத்தமா...''** என்று பக்திப் பரவசத்தில் ஆழ்ந்தார். அர்ச்சகர் அவருக்கு அளித்த தீர்த்தப் பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டு தன் இருப்பிடம் வந்தார்.



அன்றிரவு அவர் உறங்கவே இல்லை. கண் முன்னே ஸ்ரீநிவாசனின் உருவமே நிறைந்து நின்றது. மறுநாள் காலை திரு மலையில் உள்ள குமாரதாரை தீர்த்தம், பசுபுதாரை தீர்த்தம், ஆகாச கங்கை, பாப விநாசனம் போன்ற தீர்த்தங்களுக்குச் சென்று வந்தார். மறுபடியும் ஸ்ரீநிவாசனை தரிசிப்போம் என்று கோயிலுக்குள் சென் றார். அங்கு மூடிய கதவுகளைக் கண்டார். உடனே தங்கு தடையின்றி அலர்மேல் மங்கை மணா ளனான ஸ்ரீநிவாசனை துதித்து 100 பாடல்களைப் பாடி முடித்தார். பூட்டியிருந்த பூட்டுகள் தாமாகவே திறந்து கொண்டு கீழே விழுந்தன. இதை கவனித்துக் கொண்டி ருந்த அர்ச்சகர்கள் ஆச்சரியமுற்று அன்னமய்யாவின் பக்தியைக் கண்டு கௌரவத்துடன் உள்ளே அழைத்துச் சென்றனர். பக்தர்கள் வேண்டியதை அளிக்கும் கல்ப தருவான வேங்கடவன், பொன் ஆபரணங்கள் அணிந்து மின்னும் காட்சியைக் கண்டு களித்தார்.

"பூமியே சிம்மாசனமாகவும், ஆகாசமே குடையாகவும், ஏனைய தெய்வங்கள் மந்திரி களாகவும், இதர தேவர்கள் சேவகர்களாகவும், இந்த பிரம்மாண்டமே ஆகாரமாக வும், லக்ஷ்மி மனைவியா கவும், பிரம்மாவை மகனாக வும், ஸ்ரீகங்காதேவியை சத் புத்ரியாகவும் கொண்டு, ஏக போகமாக அரசாளும் ஸ்ரீமந் நாராயணனை தரிசித்தார் அன்னமய்யா.

அர்ச்சகர் ஆகம முறைப்படி செய்த அர்ச்சனைகளை பார்த்துக் கொண்டிருந்தவர் முன்பாடிய 100 பாடல் களை (சதகத்தை) மறுபடியும் பாடினார். எம்பெருமானும் அதை கேட்டு அந்த பாடல்களை ஏற்றதற்கு அடையாளமாக கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலை அவரது பாதங்களில் விழுந்தது. அர்ச் சகர் ஆச்சரியத்துடன் "இந்த சிறு வன் சாமானியமானவனல்ல. ஸ்ரீநிவாசனின் கரு ணையை பரிபூரண மாகப் பெற்றவன்" என் றார். அங்கிருந்த அனைவரும் அதை ஆமோதித்தனர். அது முதற்கொண்டு தினமும் வேங்கடவனை தரிசித்து கொண்டு நாராயண நாம சங்கீர்த்தனங்களைப் பாடிக் கொண்டு கோயிலின் மாடவீதிகளை அன்னமய்யா வலம் வருவாராம்.

தொடரும்...

தெலுங்கு மூலம்:
டாக்டர். மன்னூரு சிவப்ரவீண்
தமிழாக்கம்:
திருமதி ராதாராமநாதன், 93936 09240



# முதல் நாள் நடப்பதே நிச்சயதார்த்தம்

அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச் செயல்–6

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

பொதுவாகவே நமது இந்து சமயத்தில் இந்து வைதிக முறைப்படியான திருமண மரபையும், அதில் செய்யப்படும் சடங்குகளையும், சடங்குகளின் காரண காரியங்களையும் ஊன்றிக் கவனித்தால் நமது முழு வாழ்க்கைக்குத் தேவையான உன்னதங்களைத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக நாள் குறித்தல் என்று ஒரு சடங்கு. இது திருமணத்திற்கு முதல் நாள் மாலை நிச்சயதார்த்தம் என்று நடத்துகின்றோம். அது அவசியமானது.

இன்று பலரும் சில மாதங்களுக்கு முன்னாலேயே மிகப் பெரிய அளவில் திருமண மண்டபங்களைப் பிடித்து நிச்சயதார்த்தம் என்று ஒன்று நடத்துகின்றனர். அதில் பையனையும் பெண்ணையும் மாலை மாற்றிக் கொள்ளச் செய்கின்றனர். அதைப் புகைப்படம், வீடியோ எடுத்து ஆல்பம் போட்டு அமர்க்களமாகப் பெரிய பொருட் செலவில் நடத்தி விடுகின்றனர். கிட்டத்தட்ட இதுவே பாதி கல்யாணம் அளவுக்கு ஆகி விடுகிறது. இதனை இவ்வளவு விரிவாகச் செய்யும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. பொதுவாக பெரியோர்கள் பேசி கை தாம்பூலம் மாற்றிக் கொள்வார்களே தவிர, மணமக்கள் இரண்டு பேரையும் சேர்த்து வைக்கும் வழக்கம் இல்லை.

ஆறு மாதம் அல்லது எட்டு மாத காலத்துக்கு முன்னால் இப்படி செய்து விட்டு, இடையில் பல் வேறு காரணங்களால் திருமணம் தடைப்படும் பொழுது, இரு வீட்டாரிடையே மிகப் பெரிய சங்கடத்தை இம்முறை உண்டாக்கி விடுவதை நடைமுறையில் காண்கிறோம். ஆயினும் சமூகத்தில் இம்முறை சகஜமாகி விட்டது. இனி மாறுமா என்று தெரியவில்லை. ஆயினும் எப்போது நிச்சயதார்த்தம் செல்லுபடியாகும் என்றால், முதல் நாள் செய்து கொள்ளும் போதுதான் அது வைதிக முறைப்படி செல்லுபடியாகும். ஆண்டாள் பாசுரத்தில் இதை நாம் காணலாம். ''நாளை வதுவை மணமென்று நாளிட்டு'' என்பது ஆண்டாள் பாசுரம்.

இன்னொரு நுட்பமான விஷயத்தையும் இங்கே நாம் கவனிக்க வேண்டும். நாள் என்றாலே **"நல்லநாள்"** என்றுதான் பொருள். ஒரு ஜோதிடரிடம் சென்று நாம் இயல்பாகக் கேட்கும் கேள்வி என்ன தெரியுமா?

ஒரு நாள் பார்த்து சொல்லுங்கள். எனவே நாள் என்று பொதுவாகச் சொன்னால், அது நல்ல நாள் என்று தான் பொருள்படும். அதுவும் நல்ல விஷயத்தைத் தள்ளிப் போடாதே என்று சொல்லுகின்றது சாஸ்திரம். அதனால்தான் திருமண நிச்சயதார்த்தத்தை முதல் நாளில் நிறைவாக நடத்தும் வழக்கம் இன்றளவும் இருக்கிறது. சிலர் இதை ஏற்கனவே செய்தாகி விட்டது என்று சொல்லி, முதல் நாளில் கச்சேரி, வரவேற்பு என்று வைத்து விடுகின்றனர்.



முறையான நிச்சயதார்த்த நிகழ்வானது நாள் குறிக்கும் நிகழ்விலிருந்து தான் தொடங்குகின்றது. நல்ல வைதிகம் தெரிந்த பலர் ஏற்கனவே நிச்சயதார்த்தம் நடந்தாலும், முதல் நாள், முறையாகவும் மந்திரப் பூர்வமாகவும் செய்கின்றனர். அதில் முதலில் நாம் செய்ய வேண்டியது அனுக்ஞை எனப்படும் பெரியோர்களின் அனுமதியைப் பெறுதல். அதற்கான வணக்கம் இது.

"நமஸ்ஸதஸே நமஸஸ்ஸதபதயே
நமஸ்ஸகீனாம் புரோகாணாம் சக்ஷுஷே
நமோ திவே நம: பிரதிவ்யை; ஹரி: ஓம்"

என்று சபையை வணங்கி, புரோகிதர்களையும், பெரியோர்களையும் வணங்கி, நண்பர்களையும் உறவினர்களையும் வணங்கி, நமது பூமியையும், வானத்தையும் வணங்கி, நாம் நம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு, இன்ன காரியத்துக்காக வந்திருக்கிறோம் என்பதையும் சொல்லி, அதற்கான முறையான அனுமதியைப் பெறுதல் என்பதே அனுக்ஞை. அவர்கள் தங்கள் ஆசிகளையும் அனுமதியையும் தரும் விதமாக "யோக்யதா ஸித்திரஸ்து" என்று சொல்லி அக்ஷதை ஆசீர்வாதம் செய்வார்கள். அதன்பிறகு மற்றவற்றை செய்யத் தொடங்க வேண்டும். நாம் இப்படி முறையாக ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும்போது, அந்தச் சபையிலே, நம் காரியத்திற்கு உதவ, முப்பது முக்கோடி தேவர்களும் வந்து விடுகிறார்கள். அவர்கள் நம் காரியத்தை, தங்கள் காரியத்தைப் போலக் கருதி நிறைவேற்றிக் கொடுக்கிறார்கள். இதற்கு ஆழ்வார்கள் பாசுரச்சான்று என்ன என்று கேட்கலாம்.

"இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம்
வந்திருந்து என்னை மகள் பேசி மந்திரித்து"

என்பது ஆண்டாள் பாசுரம். நிச்சயதார்த்தம் என்பது இந்த பெண்ணை இந்த வரனுக்கு என்று பேசி நிச்சயித்து திருமண நாளை முறையாகக் குறிப்பதும், ஸம்பந்திகள் (இரு வீட்டாரும்) அதனை சபைக்குச் சொல்லி ஒருவர்க்கொருவர் கலந்து, சந்தன தாம்பூலம் பரிமாறிக் கொண்டு, பேசி, தட்டை மாற்றிக் கொள்வது என்று பார்த்தோம். இந்த நிகழ்வுக்கு இந்திரனைத் தலைவராகக் கொண்டு அனைத்து தேவதைகளும் வந்து, ஆசீர்வதித்து நடத்தி வைக்கிறார்கள் என்பது ஆன்றோர் வாக்கு. தேவதைகள் யார் யார் வருகிறார்கள் தெரியுமா? 1.இந்திரன், 2.அக்னி, 3.வாயு, 4. ஜமதக்னி, 5. சூரியன் அல்லது காசியபன், 6. வருணன், 7.ஸோமன், 8.கிருத்திகை தேவதைகள், 9.ஸவிதா, 10.க்நா, 11.பூமி தேவதை, 12.ப்ரஸாநிதி, 13.யாஜ்யபதி, 14.பிரம்மா, 15.ஸவித்ரு, 16.அச்வினி, 17. பூஷா, 18.விச்வாஸு, 19.பகன், 20.ரேவதி, 21.அர்யமா, 22.சரஸ்வதி, 23.ப்ருஹஸ்பதி, 24.சூர்யா (சூரியனின் மகன்), 25.துருவன், 26.அருந்ததி, 27.ஸததஸ்பதி, 28. விச்வே தேவர்கள், 29.யமன், 30. பித்ரு தேவதைகள். இவர்களோடு சாட்சாத் பெருமாளும் பிராட்டியுமான மகாலஷ்மித் தாயாரும் வருவார்கள்.



இவர்கள் சரீரமற்றவர்களாய் நம் கண்களுக்குப் புலப்படாமல் மேடையில் வீற்றிருப்பார்கள். அதனால் தான், வைதிக காரியங்கள் நடக்கும் மேடையில், தேவையற்ற யாரும் ஏறுவதில்லை. தவிர, காலணிகளோடு ஏறி, அங்கும் இங்கும் நடப்பதும் தவறு. இனியேனும், நாம் அக்காரியங்களை நாகரீகம் என்று செய்யக்கூடாது.

நாகரீகம் என்பது பண்பாடு மற்றும் பழக்க வழக்கங்களை உள்ளடக்கியதுதான். தேவதைகளை மந்திர பூர்வமாக அழைத்து, அவர்கள் வந்ததாகக் கருதி, உபச்சாரம் செய்துதான் நாம் நிகழ்வுகளை நடத்துகின்றோம். இப்போது ஒரு கேள்வி எழலாம். ஆண்டாள் திருக்கல்யாணம் போன்ற தெய்வத் திருமணத்திற்கு தேவதைகள் வரலாம். ஆனால் நம்மைப் போன்ற மனிதர்கள் திருக்கல்யாணத்திற்கு தேவர்களெல்லாம் வருவார்களா என்று கேட்கலாம். வருவார்கள். ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். திருமணம் என்கின்ற உயர்ந்த சம்ஸ்காரத்தில் ஒவ்வொரு பெண்ணும் ஆண்டாள் நாச்சியாரே... ஒவ்வொரு மணமகனும் சாட்சாத் பெருமாளே! திருமணப் ப்ரவரத்திலும் இப்படியே வருகிறது பார்ப்போம்.

அருளிச்செயல் தொடரும்...

ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!

தொடர் கதை

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# பிரகலாதனின் சிறந்த குணங்கள்



பிரகலாதனின் சிறந்த குணங்களைப் பற்றி சாதுக்களும், வைணவர்களும் எப்பொழுதும் புகழ்வதுண்டு. பக்தர்களைப் பற்றியும் சாதுக்களைப் பற்றியும் பேசப்படுகின்ற சத்சங்கம் தோறும் பிரகலாதனைக் குறித்தும் தவறாமல் இடம் பெறும். அவ்வளவு சிறப்புப் பெற்ற புண்ணிய சரித்திரத்திற்கு உரியவனாகிய பிரகலாதனின் மீது இரண்யகசிபுவுக்கு ஏன் கடும்பகை உண்டானது என்று தர்மராஜா நாரதரிடம் கேள்வி கேட்கும் முகமாக பாகவதத்தில் ஏழாம் ஸ்கந்தத்தில் பிரகலாதனின் சரித்திரம் தொடங்குகின்றது. சிறந்த பக்தர்களின் சரித்திரத்தை பக்தர்களின் வாயிலாக அறிவது என்பது சாலச் சிறந்தது. பக்தியில் சிறந்தவரான பிரகலாதனின் சரித்திரத்தை தர்மராஜா பக்திக்கு விளக்கமாக விளங்குகின்ற வகையில் நாரத முனிவரின் வாயிலாக கேட்டறிந்தார். அந்த திவ்வியமான பாகவத கதையை இங்கே நாமும் அறிவோமாக.

தன் சகோதரனின் மரணத்திற்குக் காரணமானவரை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை தன் மனதில் வலுப்படுத்திக் கொண்டான் இரண்யகசிபு. ஆகவே தன்னை எவராலும், எதாலும் வெற்றிப் பெற முடியாத பெரும் வரம் பெற வேண்டும் என விரும்பினான். எனவே, அவன் மந்தர

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

மலைச்சாரலுக்குச் சென்று, கால் கட்டை விரலை நிலத்தில் ஊன்றி, தன் இரண்டு கைகளையும் உயரத்தூக்கி மிகவும் கடுமையான தவம் செய்யத் தொடங்கினான். இது உண்மையில் தேவர்களுக்கு மிகவும் கலக்கத்தை ஏற்படுத்தியது. தேவர்கள் அனைவரும் ஒன்று கூடி பிரம்ம தேவரிடம் சென்று இதற்கு ஒரு முடிவை தாங்கள்தான் காண வேண்டும் என முறையிட்டனர். அதைக் கேட்ட பிரம்ம தேவர், பிருகு, தட்சர் போன்ற முனிவர்களை அழைத்துக் கொண்டு இரண்யகசிபு தவம் செய்யும் மந்திர மலைச் சாரலுக்குச் சென்றார்.

அவன் தவத்தைக் கண்டு பிரமருக்கே வியப்பு உண்டானது. உடனே பிரம்மா உன் தவத்தை மெச்சினேன். நீ விரும்பும் வரத்தைக் கொடுக்க விரும்புகிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றார். அத்துடன் தன் கமண்டலத்தில் இருந்த திவ்வியமான தண்ணீரை இரண்யகசிபு மீது தெளித்தார். அந்த திவ்வியமான தண்ணீர் அவன் உடல் மீது பட்டவுடன் மிகுந்த அழகையும் பலத்தையும் பெற்றான். மேலும், அவன் உடல் பொன்மேனியாய்த் திகழ்ந்தது. பழைய நிலையை அடைந்த இரண்யகசிபு முதலில் பிரம்மாவை வணங்கினான். பின்னர் அவரைப் பலவாறு கூறி ஸ்தோத்திரம் செய்தான். பிறகு தன் மனதில் உள்ளதை அவரிடம் கூறத் தொடங்கினான்.

தேவரீர்! நீங்கள் எனக்கு வரம் கொடுக்க விரும்பினால், தங்களால் படைக்கப்பட்ட எவராலும் எனக்கு மரணம் ஏற்படாமல் இருக்க வரம் அருள வேண்டும் என்றான். அதாவது வீட்டின் உள்ளேயும், வெளியேயும், பகலிலும், இரவிலும், பூமியிலும் ஆகாயத்திலும் மரணம் ஏற்படாவண்ணம் வரம் அருள வேண்டும். மேலும், ஆயுதங்களாலும், மனிதர்களாலும், அசுரர்களாலும், தேவர்களாலும், விலங்

குகளாலும் எனக்கு மரணம் உண்டாகக் கூடாது. எனக்கு நிகரானவன் இந்த உலகத்தில் யாரும் இருக்கக் கூடாது. உலகம் முழுவதையும் நான் ஒருவனே ஆள வேண்டும். யாகம் முதலிய கர்மாக்களினால் கொடுக்கப்படும் அவிர்ப்பாகமும் எனக்கே கிடைக்க வேண்டும். தவச் சீலர்களின் தவப்பயன் அனைத்தையும் தனக்கே வரும்படி அருள வேண்டும் என்றான்.

இரண்யகசிபுவின் கோரிக்கைகள் அவனுடைய தீய எண்ணத்தை வெளிப்படுத்துவதாய் இருந்தும், வேறு வழியின்றி அவனுக்கு அந்த வரங்களைக் கொடுத்தார். பின்னர் தம்முடைய பிரம லோகத்திற்குச் சென்றார். உடனே இரண்யகசிபு தான் பெற்ற வரங்களால் எல்லோரையும் துன்புறுத்தத் தொடங்கினான். மூன்று உலகங்கள் மீதும் போர் தொடுத்து அவைகளை தன் கைவசம் ஆக்கிக் கொண்டான். மேலும் இந்திர லோகத்தையே தன் இருப்பிடமாகவும் மாற்றிக் கொண்டான்.

அதனால், தேவர்கள் யாவரும் அந்த அசுரனின் காலில் விழுந்து வணங்கினர். அவன் தேவர்களை மிகவும் கொடுமையாக நடத்தினான். அவனுடைய கொடுமைகளைத் தாங்க முடியாமல் தேவர்கள் விஷ்ணுவை சரணடைந்தார்கள். தங்களுடைய துன்பத்தையும் துயரத்தையும் அவரிடம் எடுத்துக் கூறினர். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு அசரீரி கேட்டது.

தேவர்களே! அஞ்ச வேண்டாம். உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும். நாம கீர்த்தனை செய்யுங்கள். என் கதைகளை கேளுங்கள். என்னைப் போற்றி துதி செய்யுங்கள். இரண்யகசிபுவை அழிப்பது என் வேலை. அதை நான் செய்வேன். அது வரையில் நீங்கள் பொறுமையாக இருங்கள். பாகவதோத்தமனான பிரகலாதனுக்கு அந்த அசுரன் துன்பத்தைக் கொடுக்க தொடங்கியவுடன், நான் தோன்றி அவனைக் கொல்வேன்.

இந்த அசரீரியை இறைவனின் வார்த்தைகளாகக் கொண்ட தேவர்கள், இனி இரண்யகசிபு மடிந்தான் என முடிவு செய்துக் கொண்டனர். பின்னர் தேவர்கள் அனைவரும் அந்த தேவாதிதேவன் சொல்லிய அந்த நாட்கள் எப்பொழுது வருமோ? என எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இரண்யகசிபுவிற்கு நான்கு குமாரர்கள். அவர்களுள் பிரகலாதன் மிகவும் சிறந்த குணங்களை உடையவன். வயதில் மிகவும் குறைந்த ஐந்து வயது குழந்தையே ஆனாலும் ஒழுக்கம் உடையவனாகவும், நல்லியல்பு மிக்கவனாகவும் விளங்கினான். பரதத்துவத்தை அறிந்து கொள்வதில் நாட்டம் உடையவனாக இருந்தான். பகவான் நாராயணனிடம் மாறாத பக்தியும் சிந்தையும் உடையவனாக இருந்தான்.

மேலும், எல்லா உயிர்களிடத்தும் கருணைக் கொண்டவனாகவும், எல்லோரிடமும் நட்பு பாராட்டுபவனாகவும், பெரியோர்களை வணங்கி சேவை செய்பவனாகவும், ஏழைகளிடத்தில் ஒரு தந்தையைப் போலவும், ஆசிரியர்களைக் கடவுளாகக் கருதும் நல்லியல்புகள் உடையவனாக விளங்கினான். அசுரக் குலத்தில் பிறந்தும் அவன் சிறந்த விஷ்ணு பக்தனாய்த் திகழ்ந்தான். எந்த சூழ்நிலையிலும் கவலைக் கொள்ளாதவராகவும் உலகப் பற்றறுந்தவனாகவும் திகழ்ந்தான்.

சிறுவயதிலிருந்தே பிரகலாதன் விளையாடுவதில் விருப்பமில்லாதவனாக இருந்தான். அவன் சிந்தை முழுவதும் இறைவனிடத்திலேயே இருந்தது. நித்தியம் தான் செய்யும் காரியங்களிலும் மனம் செல்லாதவனாய் இருந்தான். சர்வம் கிருஷ்ணமயம்.

தன்னை மறந்தவனாய்க் கிருஷ்ண பக்தியில் லயித்திருந்தான். கிருஷ்ணனைக் காணாமல் ஏங்குவதும், கண்டவுடன் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்து ஆடுவதுமாக இருந்தான். மேலும், ஒரு சமயம் அழுவதும், சிரிப்பதும், ஆனந்தக் கண்ணீர் விடுவதுமாக பக்தியில் மூழ்கித் திளைத்தான்.

இரண்யகசிபு தனக்குக் குருவாக இருக்கும்படி சுக்கிராச்சாரியாரை கேட்டுக் கொண்டான். அவரும் அவன் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். அவனும் அவரைக் குருவாகக் கொண்டான். சுக்கிராச்சாரியாரின் குமாரர்கள் இருவர். சண்டன், அமர்க்கண் என்ற அவ்விருவரும் அரண்மனைக்கு அருகிலேயே ஆசிரமம் அமைத்து தங்கியிருந்தனர். அவ்விருவரிடமும் இரண்யகசிபு தன் பிள்ளையான பிரகலாதனைக் கல்வி கற்க அனுப்பினான்.

ஆனால், ஆசிரியர் சொல்லும் ராஜநீதி, பொருளாதார சம்பந்தமான பாடங்கள் மீது எதிலும் பிரகலாதனுக்கு நாட்டம் இல்லை. இருப்பினும் ஆசிரம விதிகளுக்குக் கட்டுப்பட்டு அதைக் கேட்பதும் அப்பொழுதே அதை மறந்து விடுபவனாகவும் இருந்தான். சில காலம் சென்ற பின்பு தன் பிள்ளையின் கல்வியறிவை இரண்யகசிபு சோதிக்க விரும்பினான்.

**பாகவத கதை சாகரம் தொடரும்...**

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

*மதுரகவியாழ்வார் வாழித்திருநாமம்...*

மதுரகவியாழ்வார் சித்திரை மாதம், சித்திரை நக்ஷத்ரத்தில் திருக்கோளூரில் பரமபதத்தில் சேனை முதலியாரிடமுள்ள கணாதிபரில் ஒருவரான குமுதன் என்பவரின் அம்சமாக அவதரித்தவர். இவர் அருளிய பிரபந்தம் கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆகும்.

*"சித்திரையில் சித்திரை நாள் சிறக்கவந்தோன் வாழியே*
*திருக்கோளூர் அவதரித்த செல்வனார் வாழியே*
*உத்தர கங்காதீரத்து உயர் தவத்தோன் வாழியே*
*ஒளி கதிரோன் தெற்கு உதிக்க உகந்து வந்தோன் வாழியே*
*பத்தியோடு பதினொன்றும் பாடினான் வாழியே*
*பராங்குசனே பரன் என்று பற்றினான் வாழியே*
*மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே*
*மதுரகவி திருவடிகள் வாழி வாழி வாழியே"*

(பதவுரை)

சித்திரையில் – சித்திரை மாதத்தில், சித்திரை நாள் – சித்திரை நட்சத்திரம், சிறக்க வந்தோன் – மேன்மை அடையச் செய்ய அவதரித்தவர், வாழியே – வாழ வேண்டும். திருக்கோளூர் – திருக்கோளூர் என்னும் திவ்ய தேசத்தில், அவதரித்த – பிறந்த, செல்வனார் – நம்மாழ்வார் ஒருவருக்கே அடிமை என்று எண்ணமாகிய செல்வமுடையவர். உத்தரகங்கா தீரத்து – வடக்கே உள்ள கங்கைக்கரையில், உயர் தவத்தோன் – உயர்ந்த தவத்தைச் செய்தவர். ஒளி கதிரோன் – சூரிய ஒளியுடைய கதிர்கள் போல் பிரகாசிக்கும் தோற்றம் (நம்மாழ்வார்), தெற்கு உதிக்க – தெற்கு திக்கிலுள்ள ஆழ்வார் திருநகரியில் தோன்ற, உகந்து – அதனைக் கண்டு உகந்து, வந்தோன் – ஆழ்வார் திருநகரி சேர்ந்த மதுரகவிகள். பத்தியோடு – ஆசார்ய பக்தியோடு, பதினொன்றும் – பதினோரு பாசுரங்களையும், பாடினான் – அருளினவர். பராங்குசனே – பிற மதங்களுக்கு அங்குசம் போன்ற நம்மாழ்வாரையே, பரன் என்று – உயர்ந்த தெய்வம் என்று, பற்றினான் – சரணமாகப் பற்றினவர். மத்திமமாம் – மூன்று பதங்களைக் கொண்ட திருமந்திரத்தில் நடுவாக ஆகும். பதப்பொருளை – நம: என்ற பதத்தின் பொருளை, வாழ்வித்தான் – செயல்படச் செய்தவர். மதுரகவி – இனிமையாகப் பாடவல்லவரான மதுரகவிகள், திருவடிகள் – இரண்டு திருவடிகள் வாழ்க வாழ்க வாழ்கவே.

சிறப்புரை – *(சித்திரையில் சித்திரை நாள் சிறக்கவந்தோன்)* தமிழ் மாதங்களில் முதல் மாதம் சித்திரையாகும். சித்திரை நக்ஷத்ரமும் பௌர்ணமியும் சேர்ந்து வந்து சித்திரை மாதம் எனப்பெயர் பெற்றது. இராமனும் சித்திரை மாதத்தில் பிறந்தான். இது



பற்றியே ''சைத்ரி பௌர்ணமாஸ்யஸ்மிந்'' என்கிறார் வால்மீகி. இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்வதற்காகக் குறித்த மாதமும் சித்திரை. இதுபற்றியே தசரதன் ''சைத்ர ஸ்ரீமாந் அயம் மாஸ:'' என்கிறபடியே இந்த சித்திரை மாதமானது மிகச் சிறந்தது என்கிறார். அப்படிப்பட்ட மாதத்தில் அவதரித்தவர் மதுரகவிகள். மணவாள மாமுனிகளும் மதுரகவியாழ்வார் அவதாரத்தைச் சொல்லும்போது ''ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த சீராரும் சித்திரையில் சித்திரை நாள்'' என்கிறார்-. அதாவது உலகிலே சூரியோதயத்துக்கு அருணன் உதயம் போலே வகுளபூஷண பாஸ்கரரான நம்மாழ்வார் தோன்றுவதற்கு முன்னே வந்து அவதரித்த பெருமையுடையவர் என்று உரைப்பர் பிள்ளைலோகம்சீயர். வசந்த காலத்தில் சித்திரை மாதம் நேர்பட்டாப் போலே சித்திரை நக்ஷத்ரமும் நேர்பட்டது. ''சித்ரா நக்ஷத்ரம் பவதி'' என்று ச்ருதி சொல்லுகிறபடியே சித்திரை நக்ஷத்ரமானது சிறப்பானது. இது தான் திருவரங்கத்தில் கஜேந்த்ர மோக்ஷம் கொண்டாடும் திருவூறல் திருநாள் என்ற பெரிய திருநாளாயிருக்கும். இப்படி பிரிதொன்றுக்கில்லாச் சிறப்பையுடையதான இந்த திருநக்ஷத்ரத்தை பதின்மரான ஆழ்வார்கள் வந்து உதித்த திருநக்ஷத்ரங்களைக் காட்டிலும் ஸ்வரூபத்துக்குச் சேர்ந்தது என்று உரைப்பர். ஆசார்யரான இராமாநுசர் இட்ட வழக்காய் திருமலையில் கைங்கர்யம் செய்த அனந்தாழ்வான் என்னும் ஆசார்யருக்கும் சித்திரையில் சித்திரை அன்றோ திருநக்ஷத்ரம். ''இலகு சித்திரைதன்னில் சித்திரையோன்'' என்று கொண்டாடுவர். ஆகையால் அவருக்கு மதுரகவி தாஸன் என்று தாஸ்யநாமமும் உண்டாயிற்று என்பர். எம்பெருமானாருடைய மருமகனாரான நடாதூராழ்வானின் திருப்பேரனாரான நடாதூர் அம்மாள் என்னும் ஆசார்யரும் சித்திரையில் சித்திரை நாள் என்று கொண்டாடும்படி பிறந்தவராவார். இப்படி முப்புரியூட்டும் நாளாகும்.

(திருக்கோளூர் அவதரித்த செல்வனார்) – ''ஈரொன்பதாம் பாண்டி'' என்று கூறியபடியே பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டாகும்.



அவற்றுள் திருக்கோளூர் பதினெட்டாவது திவ்யதேசமாகும். இங்கே பதுமம், மாபதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், நந்தம், நீலம், கர்வம் ஆகிய ஒன்பது வகைப்பட்ட நிதிகள் ஒளிந்து கொண்டிருக்கின்றன என்று குபேரனுக்கு அதர்மம் கோள் சொல்லிய இடமானது பற்றி, இத்தலத்துக்குத் திருக்கோளூர் என்ற பெயர் உண்டாயிற்று. இந்த திவ்ய தேசத்தில் திருவனந்தாழ்வானாகிய படுக்கை மீது வைத்தமாநிதிப் பெருமாள் பள்ளி கொண்டுள்ளார். மாமுனிகளும் ''செல்வத் திருக்கோளூர்'' என்பர். திருகோளூருக்குச் செல்வமாவது ''செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்'' என்று நம்மாழ்வார் அருளியபடியே வைத்த மாநிதியை உடையதாயிருக்கை. இவ்விடத்தில் நம்பிள்ளை, எல்லையற்ற செல்வமானது கரைபுரளும்படியாக எம்பெருமான் வந்து கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர், காக்க வேண்டியவர்க்கத்தினுடைய காப்பிலே சேர்ந்தாலன்றோ அந்தர்யாமியினுடைய செல்வம் பிரகாசிப்பது என்று சுவைபட உரைப்பர். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தேசத்தில் அவதரித்தவர் மதுரகவியாகையாலே செல்வ னானார். மேலும், மதுரகவிக்கு செல்வமாவது நம்மாழ்வாரல்லது தேவுமற்றறியாத கௌரவத்தை உடையவர். இதுபற்றியே மாமுனிகளும் "சீர்த்த மதுரகவி" என்கிறார். இதுவன்றோ இவருக்குச் செல்வம்.

(உத்தர கங்காதீரத்து உயர் தவத்தோன்) – உத்தர கங்காதீரம் – இமயமலையில் மேற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் கங்கைக்கு உத்தரகங்கா எனப்பெயர். தீரம் – கரை. இதன் கரையில் பதரிகாச்ரமம் என்ற திவ்யதேசம் உள்ளது. தீர்த்த யாத்ரையில் ஈடுபட்டவராய், மதுரகவிகள் அயோத்யை முதலான திவ்ய தேசங்களை சேவித்து, கடைசியில் பதரிகாச்ரமத்துக்கு வந்து அஷ்டாங்க யோகமாகிய உயர்ந்த தவத்தைச் செய்து வாழ்ந்து வந்தவர்.

(ஒளி கதிரோன் தெற்கு உதிக்க உகந்து வந்தோன்) – கங்கைக் கரையில் இருந்தபோது ஒருநாள் இரவு தெற்கு திசையிலே சூரியன் உதயமானாப் போலே ஒரு ஒளி தோன்றியது.

மதுரகவிகள் இது என்ன? என்று வியந்தவராய் இருந்தார். மறுநாளும் அப்படியே தோன்றிற்று. உடனே தெற்கு திசையில் ஒரு அதிசயம் இருக்க வேணும் என்று எண்ணி, அதனைக் காண உகந்து அங்கிருந்து புறப்பட்டார். பயணம்தோறும் தெற்கே அந்த ஒளிக்கதிரைப் பற்றிக் கொண்டு ஆழ்வார் திருநகரி வந்து சேர்ந்தார். அங்கு அந்த ஒளி தென்படவில்லை. இங்கு ஏதேனும் புதுமை இருக்கவேணும் என்று யோசித்தார். அங்கே வருபவர்களைக் கேட்டார். அவர்களும் நம்மாழ்வார் அவதரித்து இங்கு திருப்புளியாழ்வார் கீழே எழுந்தருளியுள்ளார் என்ற வரலாற்றைக் கூறினர். இவரும் உகந்து அங்கு சென்று ஆழ்வார் திருவடிகளில் வணங்கினார். இதனால் மதுரகவிகள் உகந்து வந்ததன் காரணம் சொல்லப் பட்டது. நம்மாழ்வாரை சூரியனோடு ஒப்பிடும்போது, ***"திருவாய்மொழி ஆயிரமுமாகிற கிரணங்களை உடையவராய், திருமகள், திருவாபரணம், ஆயுதம் ஆகியவற்றோடு கூடிய நாராயணனை இதயத்திலே உள்ளவராய், வேத வித்துக்களான எல்லா சீடர்களும் கேட்டபோதே தாம் இருந்த தேசத்தை நோக்கி வணங்கும்படியான வைபவத்தையுடையரான வகுளாபரணராயிருக்கிற நம்மாழ்வாராகிற சூரியன்"*** என்று மாமுனிகள் ஆசார்ய இருதய உரையில் (சூ.83) அருளியது காண்க. அப்படிப்பட்ட சூரியன் தெற்கு திக்கில் உதித்தது கண்டு உகந்து ஆழ்வார் திருநகரி வந்தவர் மதுரகவிகள் என்றபடி.

வாழித்திருநாமம் வளரும்...



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## உயிர்மெய் எழுத்துக்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| च | छ | ज | झ | ञ | चु | छु | जु | झु | ञु |
| ச | ச$_2$ | ஜ | ஜ$_2$ | ஞ | சு | சு$_2$ | ஜு | ஜு$_2$ | GNU |
| चा | छा | जा | झा | ञा | चू | छू | जू | झू | ञू |
| சா | சா$_2$ | ஜா | ஜா$_2$ | ஞா | சூ | சூ$_2$ | ஜூ | ஜூ$_2$ | GNOO |
| ची | छी | जी | झी | ञी | चृ | छृ | जृ | झृ | ञृ |
| சி | சி$_2$ | ஜி | ஜி$_2$ | GNI | ச்ரு | ச்ரு$_2$ | ஜ்ரு | ஜ்ரு$_2$ | ஞ்ரு |
| चि | छि | जि | झि | ञि | चे | छे | जे | झे | ञे |
| சீ | சீ$_2$ | ஜீ | ஜீ$_2$ | GNEE | சே | சே$_2$ | ஜே | ஜே$_2$ | ஞே |

**– திரு. உ.வே. பி.டி. சேஷாத்திரி, சென்னை,**
**99404 28830**

மேலும் வளரும்...



# திருத்தொலைவில்லிமங்கலம்

## (நவதிருப்பதி–4&5, இரட்டைத்திருப்பதி)

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

சுப்ரபர் என்கிற மஹரிஷி, யாகங்களைச் செய்து பகவானைப் பூஜிக்கத் தகுந்த இடங்களைத் தேடி, இங்கு வந்து ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த நிலத்தை சீர்திருத்தம் செய்தபோது உள்ளே பூமியில் இருந்த ஒளி பொருந்திய தராசும், வில்லும் கிடைத்ததாகவும், முனிவர் அவற்றை கையில் எடுத்தவுடன் தராசு–ஆணாகவும், வில்–பெண்ணாகவும் மாறி, முனிவரை வணங்கி, தாங்கள் முற்பிறவியில் வித்யாதரன் என்றும், மனைவி (வில்) யுடன் கூடி நாணம் இல்லாமல் இருந்தபோது, அவ்வழியே வந்த குபேரனைக் கவனிக்காது, கேளிக்கையைத் தொடர்ந்ததால் குபேரன் இப்படி தராசும் வில்லுமாக ஆகுமாறு சபித்ததாகவும், முனிவரால் பழைய நிலையை அடைந்ததாகவும் சொன்னார்கள்.

துலையும் (தராசும்) வில்லும் மங்கலமாகிய யாகத்தை சுப்ரபர் நடத்தத் தொடங்கும்போது, இது நடந்ததால் இந்த இடம் துலைவில்லிமங்கலம் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். இத்தலத்தின் பழைய பெயர் "கேதாரநிலையம்" என்பர்.

சுப்ரபர், தினந்தோறும் இந்த எம்பெருமானை அர்ச்சிப்பார். இவரது பக்தியில் மகிழ்ந்த பகவான், முனிவரைப் பின் தொடர்ந்து பொய்கையில் தாமரையைப் பறிக்கும்போது, முனிவர் பின்பக்கம் திரும்ப, அங்கு பகவானைக் காண, அந்த இடத்திலேயே தாமரை மலர்களால் பகவானை அர்ச்சித்தார். பகவான் மகிழ்ந்தார். இவ்விடத்தில், பகவானின் திருநாமம் "அரவிந்தலோசனன்" என்று ஆயிற்று. இவ்வாறு துலை வில்லி மங்கலம் என்கிற திவ்விய தேசம், இரட்டைத் திருப்பதியாக ஆயிற்று. தேவர்களும், வானுலகிலிருந்து வந்து அரவிந்தலோசனனை அர்ச்சித்தனர். ஹோமங்களில் அதுவரை ஹவிர்பாகம் கிடைக்காது இருந்த "அச்வினீ தேவர்கள்" இந்த எம்பெருமானை நோக்கி இங்குத் தவம் இருந்து, அர்ச்சித்து அருள் பெற்றதாக வரலாறு.

விபீதகன் என்கிற பிராம்மணன் முற்பிறவியில் குருவின் பசுவைத் திருடிய பாவத்தால், இப்பிறவியில் குஷ்டநோயால் வருந்த, நாரதரின் அறிவுரைப்படி இங்கு வந்து புனித நீராடி, பகவானை வழிபட்டு, நோய் நீங்கியதாகச் சொல்வர்.

**சிறப்புகள் :**

வித்யாதரன் – காமத்தால் செய்த குற்றத்திற்கு தேவப்பிரானால் விமோசனம். குருவின் பசுவைத் திருடிக் கள்ளத்தனம் செய்த குற்றத்திற்கு அரவிந்த லோசனனால் விமோசனம்–இரட்டைத் திருப்பதி எம்பெருமான்களின் பெருமை.

**ஒரு திருப்பதி :**

| | |
|---|---|
| பெருமாள் | – தேவப்பிரான் (ஸ்ரீநிவாஸன்) கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம் தாமிரவருணி வடகரை. |
| தாயார் | – பகவானின் இருபுறமும் உபய நாச்சிமார் (தாயாருக்கு தனிக்கோயில் இல்லை) |

**இன்னொரு திருப்பதி :**

| | |
|---|---|
| பெருமாள் | – அரவிந்த லோசனன் கிழக்கு நோக்கிய அமர்ந்த திருக் கோலம். (தாமிரவருணியில் இருந்து பிரியும் ஆற்றங்கரை யில்) |
| தாயார் | – கருந்தடங்கண்ணி நாச்சியார். |
| விமானம் | – குமுத விமானம். |
| தீர்த்தம் | – வருண தீர்த்தம், தாமிரவருணி |
| தல விருக்ஷம் | – |
| ப்ரத்யக்ஷம் | – இந்திரன், வாயு, வருணன். |
| ஆகமம் | – வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – ஸ்ரீநம்மாழ்வார். |
| விசேஷம் | – ஸ்ரீதேவப்பிரான் திருத்தலம், |

கேது பரிகாரத்தலம், அரவிந்தலோசனன் திருத்தலம், ராகு பரிகாரத்தலம்.

**த்யான சுலோகம்**

*தீர்காக்ராஸித லோசநா ததபலா ஸ்ரீதேவதேவோ ஹரி:*
*யஸ்மின் பூர்வமுகஸ் ஸுரேந்த்ர வரத: ஸ்ரீதாம்ர பர்ணீதடே |*
*ஆஸிநச்ச விமாநமர்த்தி சுபதம் நாம்நாசகுப்தம் மஹத்,*
*தஸ்மிந் நிஸ்துல மங்க லாக்யநகரே ஸர்வாநிமாந் பாவயே ||*

**பாசுரம்**

*"திருந்து வேதமும் வேள்வியும் திருமாமகளிரும் தாம் மலிந்து,*
*இருந்து வாழ் பொருநல் வடகரை வண்தொலை வில்லிமங்கலம்*
*கருந்தடங்கண்ணி கைதொழுத அந்நாள் தொடங்கி இந்நாள் தொறும்*
*இருந்திருந்து அரவிந்தலோசன! என்று என்றே நைந்து இரங்குமே."*

– நம்மாழ்வார்

*"வாயும் மனைவியர் பூமங்கையர்கள், எம்பிராற்கு*
*ஆயுதங்கள் ஆழி முதல் ஐம்படைகள் - தூய*
*தொலைவில்லிமங்கலம் ஊர், தோள், புருவம், மேனி*
*மலை, வில், இமம் கலந்த வான்."*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

451. *ஓம் ஸதாம்கதி: நம:*
(நல்லோருக்குப் புகலிடமே)
*ஓம் உத்தாரிண்யை நம:*
(சம்சாரத்திலிருந்து தாழ்ந்தவர்களையும், வைகுண்டத்துக்கு ஏற்றுபவளே)


452. *ஓம் ஸர்வதர்ஸீ நம:*
(சகல தர்மங்களையும் நேரில் காண்பவனே)
*ஓம் தாரயந்த்யை நம:*
(அடியவர்களை, அவரவர் துயரக் கடலைக் கடக்கும்படி செய்பவளே)

## சாஸ்த்திர நீதிகள்–81

ஸ்வ க்ரஹே பூஜ்யதே மூர்க்க: ஸ்வ க்ராமே பூஜ்யதே ப்ரபு: |
ஸ்வ தேசே பூஜ்யதே ராஜா வித்வான் சர்வத்ர பூஜ்யதே ||

கெட்ட நடத்தை உள்ளவன் எனினும் அவன் வீட்டில் உள்ளவர்கள் எதிர்த்து பேச மாட்டார்கள்! கிராம அதிகாரி சரியாக நடந்துக் கொள்ளாத போதும் அவனை உயர்த்தி பேசியே காரியம் சாதித்துக் கொள்வர். ராஜாவையும் அப்படியே புகழ்ந்து பேசி ஆகனும். ஆனால் நல்ல படித்த பண்டிதனை அவன் சென்ற இடம் எல்லாம் மதித்து பேசுவார்களாம்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



453. **ஓம் நிவ்ருத்தாத்மா நம:**
(இந்த்ரிய விஷயங்களிலிருந்து மனத்தை திருப்புபவனே)
**ஓம் சாஸ்வத்யை நம:**
(எப்போதும், எவ்வித மாறுதலுமின்றி இருப்ப வளே)

454. **ஓம் ஸர்வஜ்ஜ நம:**
(எல்லாவற்றையும் அறிந்தவனே)
**ஓம் ஸமிதிம்ஜயாயை நம:**
(எல்லா உலகங்கட்கும் எஜமானி என்பதை மறுப்பவர்களை ஜெயித்தவளே)

455. **ஓம் ஜ்ஞானமுத்தமாய நம:**
(பரமஜ்ஞானத்துக்கு இருப்பிடமே)
**ஓம் மஹாச்ரியை நம:**
(மோக்ஷத்துக்காக ஆச்ரயிக்கப்படுபவளே)

456. **ஓம் ஸுவ்ருத: நம:**
(உயர்ந்த வ்ருதம் பூண்டவனே)
**ஓம் அஜஹத் கீர்த்யை நம:**
(கீர்த்தி, எப்போதும் அகலாதபடி, புகழப்படு பவளே)

457. **ஓம் ஸுமுக: நம:**
(அமுதகலச ஹஸ்த – மகிழ்ச்சியே)
**ஓம் யோகச்ரியை நம:**
(அண்டியவர்களுக்கு புதிய, புதிய நன்மைகளைச் செய்பவளே)

458. **ஓம் ஸூக்ஷ்ம: நம:**
(அசுரர்கள் புத்திக்கு எட்டாதவனே)
**ஓம் ஸித்தி ஸாதிந்யை நம:**
(அனுஷ்டானத்தில் குறையிருந்தாலும், அடியவர்களுக்கும் பல ஸித்தி அருள்பவளே)

459. **ஓம் ஸுகோஷ: நம:**
(அம்ருதமதன சமயத்தில் தேவ அசுர கோஷ அத்புதனே)
**ஓம் புண்யச்ரியை நம:**
(புண்ய புருஷர்களால் ஸ்தோத்தரிக்கப்படுபவளே)

460. **ஓம் ஸுகத: நம:**
(அம்ருத சுகத்தைத் தேவர்களுக்கு அளித்தவனே)
**ஓம் புண்ய நிலயாயை நம:**
(புனிதமான இடத்தில் மட்டுமே நிலைத்திருப் பவளே)

**ஸ்ரீமதே விசாலக்ருஷ்ணாக்ஷீதேவி ஸமேத ஸ்ரீதேவநாத ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:**
**ஸ்ரீமதே விசாலக்ருஷ்ணாக்ஷி ஸமேத ஸ்ரீஅரவிந்த லோசன பரப்ரஹ்மணே நம:**

குறிப்பு :
ஆழ்வார் திருநகரியில் இருந்து தாமிரவருணி வடக்குக் கரையில் கிழக்கே 3 கி.மீ. தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**திவ்ய தேச வைபவம் வளரும்...**



## திருமலையில் பவித்ரோத்ஸவம்

**திருமலை திருத்தலத்தில் வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ நடக்கும் குற்றங்களுக்கு பரிகாரமாக சிராவணமாசம் [ஆவணி மாதத்தில்] மூன்று நாள் நடைபெறும் உத்ஸவம் பவித்ரோத்ஸவம். இவ்வுத்ஸவத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீவராஹ ஸ்வாமி, ஸ்ரீபேடி ஆஞ்சநேய ஸ்வாமி ஆலயங்களிலுள்ள மூல மூர்த்திகளோடு அனைத்து உற்சவ மூர்த்திகளுக்கும் பவித்திர மாலைகள் அணிவிக்கப்படுகின்றன. சுமார் 500 ஆண்டு காலம் தொட்டு இன்று வரை திருமலையில் மிகப் புனிதமாக நடைபெறுகின்ற மகா உற்சவம் இது.**




# உடல் தவமே வெற்றியின் முதல் படி

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ், 6304428489

இவ்வுலகில் எதனை சாதிக்க வேண்டுமென்றாலும் மனிதனுக்கு தபோபலம் இருத்தல் வேண்டும். அசுரர்கள் கூட இவ்வுலகினை தம் கட்டுக்குள் கொண்டு வர, தீவிரமாக தவங்களை செய்து பலசாலிகளாயினர் என்று நாம் புராணங்கள் வாயிலாக அறிகிறோம். உண்மையில் இவ்வுலகு படைக்கப்பட்டபோது முதன் முதலில் கேட்கப்பட்ட ஒலி "தவ" என்று அறிதல் வேண்டும்.

ஸ்ரீமந்நாராயணனின் நாபிக்கமலத்திலிருந்து தோன்றிய பிரம்மதேவன் தன் பணி என்னவென்று அறியாமல் இருந்தபோது "தவ" எனும் வார்த்தை இருமுறை அவருக்குக் கேட்டது. அதனை கேட்ட பிரம்மதேவன் தவத்தில் மூழ்கி, பிறகு அற்புதமான படைப்பினை புரிந்தார். ஆனால், மானிடர்கள் தானம் செய்வதை போன்று தவங்களை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் மூன்று வகையான தவங்களை செய்து தபோபலத்தைப் பெற்று, வெற்றிகளைப் பெறலாம் என பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறுகிறார். முக்கியமாக இளைஞர்கள் இதனை கருத்தில் கொண்டு கீதாசார்யர் கூறிய தவங்கள் எவை என அறிந்து கொள்ளுதல் மிகவும் சிறந்ததாகும்.

வெற்றிப் பாதைக்குச் செல்வதற்கான முதல் அடி உடலின் வாயிலாக செய்யக்கூடிய தவத்தின் மூலமாகவே வருகின்றது. "தெய்வங்கள், அந்தணர்கள், பெரியோர்கள், ஞானிகள் இவர்களைப் பூஜித்தலும், தூய்மையும், நேர்மையும், பிரம்மச்சர்யமும், அகிம்சையும் உடலால் செய்யக் கூடிய தவம் என்று சொல்லப்படுகிறது" – பகவத்கீதை 17–14. ஒவ்வொரு மானிடரும் இத்தவத்தினை அனுதினமும் செய்தல் வேண்டும். இளைஞர்கள் இதனை அவ்வப்பொழுது செய்வதை நம்மால் காணவும் முடிகிறது. உதாரணமாக இறைவனை வணங்குதலும், பெற்றோரை வணங்குதலும் முக்கியமாக தேர்வு



## ஸப்தகிரி வாசகர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264359 தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.**

நேரங்களில் காணப்படுகின்றது. அதே போன்று, பிறந்தநாளில், பண்டிகை நாட்களில், அதுமட்டுமின்றி தேர்வில் சிறந்த மதிப்பெண் பெறும் நாளில் பெற்றோரை வணங்குவது சர்வ சாதாரணமாகக் காண முடிகிறது.

எனவே, கீதாசார்யன் கூறுவதை பொறுத்து இறைவன், பிராம்மணர், குரு, பெற்றோர் மற்றும் மூத்தோரை எப்பொழுதும் பூஜித்து வணங்குதல் வேண்டும். இதுவும் உடலால் செய்யக் கூடிய தவங்களில் ஒன்றாகும்.

பெற்றோரை வணங்குவதனால் அவர்களின் வாயினின்றும் இதயத்திலிருந்தும் பரிபூரணமான ஆசி கிடைக்கின்றது. பெரியோரை தினமும் தவறாமல் வணங்குதல் வேண்டும். யாரொருவர் இதனை தவறாமல் மாதம் முழுவதும் செய்து வருகிறார்களோ அவர்களுக்கே கீதை வாக்கின் மகிமை தெரியும். கோயிலில் பிராம்மணரை வணங்கினால் அவர் வழங்குவதும் ஆசிர்வாதமேயல்லவா!

இவற்றோடு தூய்மையும், நேர்மையும் உடலால் செய்யக் கூடிய தவமே என கூறலாம். தூய்மை என்பது உடல் தூய்மையைக் குறிக்கின்றது. தினமும் இரு முறை குளிப்பதால் உடல் தூய்மையாவது போன்று, தினமும் குறைந்தது 15 நிமிடங்கள் இறைவனை நினைத்து தியானத்தில் இருந்தால் மனமும் தூய்மையடைகின்றது. மென்மையானவராக இருத்தலும், பொறுமையாக இருத்தலும் நேர்மை குணம் என கூறப்படுகின்றது.

பிரம்மச்சரியமும் உடலால் செய்யக்கூடிய தவமாகும். இன்றைய காலகட்டத்தில் பல விரதங்களை மேற்கொள்வோரும் இந்த பிரம்மச்சரியத்தைத் தவறாமல் கடைபிடிப்பதை காணமுடிகிறது. இது கீதையில் கூறப்பட்ட சூத்திரமுமாகும். இளைஞர்கள் இதனை தவறாமல் கடைபிடித்து நிர்மலமான மனதுடன் இருத்தல் வேண்டும். அதே போன்று அகிம்சையும் கடைபிடித்தல் வேண்டும்.

அசைவ உணவுகளை உட்கொள்ளாமல் இருத்தலும் அகிம்சையை கடைபிடித்தது போன்றதாகிறது. சைவ உணவுகளால் தான் மனதும் நிர்மலமாக இருக்கும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும். அதுவும் உடலால் செய்யப்படுகின்ற தவமாகின்றது.

இவ்விதமாக உடலால் தவம் செய்வோர் நிச்சயமாக தபோ பலத்தைப் பெற்று சாதிப்பர். வேண்டுமென்றால் நீங்களும் ஒரு மாத காலம் இந்த உடல் தவத்தை கடைபிடித்துப் பாருங்கள் கீதை வாக்கியத்தின் மகிமை உங்களுக்கே தெரியும்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 47க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப | ர | ம | ப | த | ம் | | | 2 கு | 3 தி |
| ம | ந | ய | ஜா | நு | மா | ரா | தே | ம | 4 ஸ்ரீ | ரு | ரு |
| 5 அ | ப் | ப | ண் | ணா | ச் | சா | ரி | யா | ர் | வா | க் |
| 6 தி | ரி | ச | டை | ர் | ப | ட | 7 கை | ட | 8 தா | யூ | க |
| | ம் | 9 ச | க் | க | ர | த் | தா | ழ் | வா | ர் | பி |
| ம் | ய | லை | நி | த | ந் | ன | 10 ஆ | கி | ல் | 11 க | ஸ் |
| ன | ளை | 12 ஸ்ரீ | ர | ங் | க | ம் | | | | ங் | த |
| டி | பா | டை | | | 13 கொ | ல் | ஹா | பூ | ர் | ரு | ல |
| ப | ப் | ட் | ம | ர | க் | வி | ரி | 14 தி | ட | ஷ் | ம் |
| ப் | டி | 15 கோ | வி | ந் | த | ன் | ரை | 16 தா | ஷ் | ய | |
| ரு | ண் | ல் | ட | ம | ரு | தி | ய | றி | 17 சி | ஷ் | |
| 18 தி | 19 மொ | 20 மே | | ணி | கே | க் | லி | ல் | 21 வ | 22 ரு | 23 தி |

தொடர்

ஆயுர்வேதம்

# தனியா



*''விசிஷ்ட மிஸ்ட்ட ஸம்ஸ்காரை: பதைரிஸ்ட்டை:*
*ரஸாதிபீ: மனோஞ்ஞாம் ஸுசி நாதுஷ்நமஸநம் ஹிரிதம்''*

என்று சான்றாண்மைக் கொண்ட ஆயுர்வேத வைத்ய நூல் சுஸ்ருத ஸ்ஹிதை விளக்கம் கொடுக்கும். அதாவது, சிறப்புமிக்க, ஆராய்ந்து அறியப்பட்ட, மனதிற்கும் உடலுக்கும் பொருந்தக்கூடிய, விரும்பிய ருசிகளோடு தூய்மையாக இருக்கும். தற்சமயம் மேற்கொள்ளும் உணவு பழக்கம் உண்பதற்கு யோக்கியமானது என்றுப் பொதுவாகப் புரிந்துக் கொள்ளலாம்.

இப்படியாக மேற்கொள்ளும் உணவு வகையில் சமைப்பதற்கு நிறம், ருசி, நறுமணத்திற்கும் பயன்படுத் தும் பல்வேறு பொருட்களில் தனியா முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. நாம் மேற்கொள்ளும் தினசரி வாழ்வில் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் பல்வேறு நோய்களுக்கு அபார மருத்துவ குணம் கொண்ட பொருளாக தனியா விளங்குகின்றது.

இந்த தனியாவை சமஸ்கிருதத்தில் "தான்யக" என்று அழைப்பர். அம்பெல்லபெரெ எனும் தாவர குடும்பத் தைச் சார்ந்து. இதனை "கொரியாண்ட்ரம்" என்று ஆங்கி லத்தில் அழைப்பர். இதன் அறிவியல் பெயர் கொரியாண் தர் சேடைவம். தனியாவை வறுத்து மருந்தாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### வயிற்றில் எரிச்சல், தலை சுற்றல் :

தனியா 50 கிராம், வருத்த சீரகப்பொடி, கருப்பட்டி வெல்லம் என இவை ஒவ்வொன்றும் 50 கிராம் வீதம் ஒன்றாக கலந்து வைத்துக் கொண்டு, காலை, மாலை என 2–3 கிராம் பொடியை 50 மி.லி. நீருடன் கலந்து பருகி வந்தால் குணமாகும்.

### முகப்பருக்களுக்கு :

தனியா பொடியுடன் ஆயுர்வேத மருந்துக் கடைக ளில் கிடைக்கும் வசம்புப்பொடி, சுகந்த பால் இவற்றினை ஒன்றாக கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் ஒரு

தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் :
முனைவர் பா. தனஞ்செழியன், 9003500499

முறை, தேவையான அளவு பொடியுடன் சிறிது நீர் சேர்த்து முகப்பருக்கள் மீது பூச வேண்டும். பின்பு ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நீரால் கழுவ வேண்டும். இப்படி செய்து வந்தால் முகப்பருக்களோடு கரும் புள்ளிகளும் மறைந்து முகம் பொலிவாக ஒளி வீசும்.

### பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சனைகள் தீர :

தனியா பொடி, சர்க்கரை சரிசமமாகக் கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் மூன்று வேளை வேளைக்கு 1–2 கிராம் பொடியை 50 மி.லி. நீருடன் கலந்து பருகி வந்தால் தீர்வு கிடைக்கும். மேலும் வாய், மூக்கு மலத்துவாரம் வழி இரத்தம் வழிவதும் குறையும்.

### அதிகமான உஷ்ணம் குறைய :

தனியா பொடி 50 கிராம், கசகசா வருத்து செய்த பொடி 50 கிராம், கிஸ்மிஸ் 100 கிராம், ஆயுர்வேத மருந்துக் கடைகளில் கிடைக்கும் அதிமதுரம் பொடி 100 கிராம் என இவற்றை ஒன்றாக சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும். அடுத்து அரைக்கிலோ தூய்மை யான பசு நெய்யுடன் கலந்து வைத்துக் கொண்டு, நாள் தோறும் இரண்டு வேளையாக வேளைக்கு ஒரு தேக்

கரண்டி அருந்தி, 100 மி.லி. பால் பருகி வந்தால் கண் எரிச்சல், சிறுநீர், மலத்துவாரங்களில் எரிச்சல், கை கால் எரிச்சல், வாய்ப்புண் முதலான பிரச்சனைகள் முற்றிலுமாக நீங்கும்.

**படுக்கையில் சிறுநீர் கழித்தல் :**

தனியா, காய்ந்த மாதுளை மலர்கள், தும்பை சீழ், வருத்த கருப்பு எள்ளு, கருப்பட்டி வெல்லம் முதலான சூர்ணங்களை ஒவ்வொன்றும் 25 கிராம் வீதம் ஒன்றாக கலந்து காலை, மாலை 2–3 கிராம் பொடியை 50 மி.லி. நீரில் கலந்து பருக வேண்டும். குழந்தைகளுக்கு ஒரு கிராம் அளவுதான் பயன்படுத்த வேண்டும். இங்ஙனம் செய்து வந்தால் படுக்கையில் சிறுநீர் கழித்தல் முற்றிலும் குறையும்.

**பாத வெடிப்பு :**

தினமும் ஒரு முறை 200 மி.லி. நீரில் 5 கிராம் தனியா 5 கிராம் சீரகம், 2–3 கிராம் பனங்கற்கண்டு, ஒருத்துண்டு இஞ்சி இவற்றைக் கலந்து, 100 மி.லி. நன்றாக சூடாக்கி பிறகு வடிகட்டி பருகி வர வேண்டும். இதனால் இரத்தம் சுத்தமாகி தோல் சார்ந்த வியாதிகளும் குணமாகும்.

**முடக்கு வாதத்திற்கு :**

நாள்தோறும் காலை வெறும் வயிற்றில் 200 மி.லி. நீரில் 2–3 கிராம் தனியா பொடி, 2–3 கிராம் இடித்த கருந்திராட்சை கலந்து, 100 மி.லி. நீராக ஆன பிறகு வடிகட்டி பருகி வந்தால் உடலில் அதிகமாக சுரக்கும் யூரிக் ஆசிட் குறைந்து முடக்குவாதம் குறையும்.

**பக்கவாத பிரச்சனைக்கு :**

தனியா, வறுத்த சீரகம், மிளகு, திப்பிலி பொடிகளை ஒவ்வொன்றும் 25 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் ஒருவேளை100 மி.லி. இளஞ்சூட்டு நீரில் 2–3 கிராம் இந்த பொடி, 2–3 கிராம் உப்பு, அரைத்துண்டு எலுமிச்சை சாறு கலந்து பருகி வந்தால் இந்த பிரச்சனைக் குறையும்.

**தலைச்சுற்றல் :**

காலையில் ஓர் மண் குடத்தில் 200 மி.லி. நீர் ஒரு தேக்கரண்டி வீதம் தனியா, சுண்டைக்காய் தோல் போட்டு இரவு முழுக்க ஊறவைத்து, பின்பு வடிகட்டி அந்த நீரைப் பருக வேண்டும். இப்படி காலையும், மாலையும் பருகி வந்தால் பிரச்சனை விரைவில் குணமாகும்.

**நினைவாற்றல் அதிகரிப்பதற்கு :**

தனியா, சோம்பு, ஏலக்காய், சீமை பாதாம் பருப்பு கருப்பட்டி வெல்லம் இவற்றின் பொடிகள் ஒவ்வொன்றும் 30 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் உறங்குவதற்கு முன்பு 100 மி.லி. இளஞ்சூட்டு பாலில் 2–3 கிராம் பொடியைக் கலந்து பருகி வந்தால் நினைவாற்றல், மன ஒருமைப்பாடு மேம்படும். மன நிம்மதியும் கைக்கூடும்.

சீமை பாதாம் பருப்பு 1–2 மணி நேரம் வெண்ணீரில் ஊற வைத்து, பொட்டு நீக்கி, காய வைத்து சூர்ணத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர்வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

ஆயுர்வேதம் வளரும்...

## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. அப்ராக்ருத தேஹம், கர்பவாசம் இல்லை.
2. கருணாமயனான ஸ்ரீமந்நாராயணன்.
3. ப்ரளய காலத்திலிருந்து.
4. வைவஸ்வத மன்வந்த்ரம்
5. அவன் தன் மகனான நாராயணன் பெயர் சொல்லி அழைத்ததால் அங்கு விஷ்ணுவின் தூதர்கள் வந்தனர்.
6. ஷல்யாதி, சுகன்யா, சவனி, இந்திரா, அஸ்வினி, தேவதேக.
7. நபாகன்.
8. அம்பரீஷன்.
9. தஸம அத்யாயம் (10).
10. கர்ப்ப சுலோகம்.

தொகுப்பு : திருமதி. என். ஹேமா, திருப்பதி



# 2020
# ஜூலை மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் | (யுரேனஸ்) | சுக்ரன் | (புதன்) ராகு சூரியன் |
| (நெப்ட்யூன்) | ஜூலை-2020 | | |
| (சனி) | 12 – புதன் –வ.நி.<br>16 – சூரியன் –கடகம் | | |
| குரு (ப்ளூட்டோ) கேது | சந்திரன் | | |

**மேஷம்**
உங்கள் ராசிநாயகன் பன்னிரண்டாமிடத்தில் சஞ்சரிக்கிறார். சுக்ரன் இரண்டில் வலிமையாக இருப்பதால் தன வரவிற்குக் குறை இராது. எனினும் குரு, சனி ஆகியோரின் சஞ்சாரம் நன்றாக உள்ளதால் தொழில் மற்றும் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வழிபிறக்கும்.

**ரிஷபம்**
இம்மாதம் முழுவதும் சுக்ரன், ராசியிலேயே சஞ்சரிப்பார். உடல் நலம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். நீதிமன்ற வழக்குகளில் சாதகமான தீர்ப்பை எதிர்ப்பார்க்கலாம். புதன் வக்ர நிவர்த்தி பெறுவதால் பிள்ளைகளால் பெருமிதமும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

**மிதுனம்**
ராசிநாயகன் புதன் ராசியில் வக்ர நிவர்த்தி பெறுவதுடன் குருவின் பார்வையையும் பெறுகிறார். திருமணம் தொடர்பான காரியங்களில் ஏற்பட்ட தடைகள் விலகும். பெயரும், புகழும் தேடி வரும். பொது மக்களின் ஆதரவு அதிகரிக்கும் அரசியலில் உள்ளவர்களுக்கு புதிய பதவி, பொறுப்புகள் கிடைக்கும்.

**கடகம்**
மதம், மதச் சடங்கு தொடர்பான தொழிலில் நிறைய ஆதாயம் கிடைக்கும். சில அரசியல் தலைவர்களின் தொடர்பும் கிட்டும். இம்மாதம் செலவினங்கள் அதிகரிக்கக்கூடும். எதிர்ப்பாலர் மூலம் செல்வம் கிடைக்கக்கூடும். இளைய உடன் பிறப்பால் சற்று அமைதி குறையலாம்.

**சிம்மம்**
ராசி நாயகன் முதலிரண்டு வாரங்களில் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பார். கலை, இசை போன்ற துறைகளில் ஈடுபாடு அதிகரிக்கும். திருமணத்தடை, தாமதம் நீங்கும். பொருளாதாரப் பிரச்சனைகள் விலகும். அலுவலகத்தில் உழைப்புக்கும் திறமைக்கும் ஏற்ற உயர்வு கிடைக்கும்.

**கன்னி**
உங்கள் ஜென்ம ராசிக்கு பத்தில் ராசிநாதன் புதன் உலவிடுகிறார். தனஸ்தானாதிபதி சுக்ரன் ஒன்பதில் சஞ்சரிக்கிறார். தொழில் வீட்டிற்கு குருவின் பார்வையும் கிடைத்திருப்பதால், தொழிலில் மேன்மையான இடத்தை அடைவீர்கள். அலுவலர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**துலாம்**
ராசிக்கு 3–ல் குருவும், 9–ல் புதனும் உலவுவதால் நல்ல தகவல்கள் வந்து சேரும். நண்பர்களும் உறவினர்களும் பக்க பலமாக இருப்பார்கள். உடன் பிறப்புகளால் நலம் கூடும். புதன் வக்ர நிவர்த்தியாவதால் சுப காரியங்கள் நிகழும். புனித யாத்திரை மேற்கொள்ள வாய்ப்புகள் வரும்.

**விருச்சிகம்**
ராசி நாயகன் செவ்வாய் ஐந்திலும், ஐந்திற்குரிய குரு இரண்டிலும் உலவிடுகின்றனர். சுக்ரன் ராசியை நோக்குவதால் கலைத் துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் கூடி வரும். ஒன்பதிற்குரிய சந்திரன் ராசியில் அமர இம்மாதம் தொடங்குவதால் ஆன்மீகத்தில் நாட்டம் உண்டாகும்.

**தனுசு**
ராசி நாதன் குரு ராசியிலும், செவ்வாய் நான்கிலும், புதன் ஏழிலும் உலவ இம்மாதம் தொடங்குகிறது. நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற சொத்துக்கள் சேரும். ராகுவும் ஏழில் உள்ளதால் மறுமணத்திற்காகக் காத்திருப்பவர்களின் எண்ணம் ஈடேறும்.

**மகரம்**
ராசி நாயகன் சனி ராசியில் அமர, யோககாரகன் சுக்ரன் தன் சுய வீட்டில் உலவிட இம்மாதம் ஆரம்பமாகிறது. தொழில், வர்த்தகம் மிகவும் சிறப்பாக இருக்கும். தேவைக்கேற்ற பணவரவு வந்து கொண்டே இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் கிடைத்து வரும்.

**கும்பம்**
ராசி நாயகன் பன்னிரண்டிலிருப்பினும், தொழில் வீட்டிற்குரிய செவ்வாய் இரண்டிலும், சுக்ரன் நான்கில் அமர்ந்து, தொழில் வீட்டை நோக்குவதால் தொழில் வியாபாரம் நல்ல முறையில் முன்னேறும். இனி வராது என கைவிட்ட பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும்.

**மீனம்**
ராசி நாயகன் குரு பத்தாமிடத்தில் வக்ரமாக இயங்கினாலும் ஏழுக்குடைய புதன் வக்ர நிவர்த்தி பெறுகிறார். சுகஸ்தானம் வலிமை பெறுகிறது. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட கருத்து மோதல் நீங்கி அமைதியும் சுமூகமும் ஏற்படும். மாணவர்களின் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணலாம்.



*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*

பறவையேறு பரம்புருடா!
நீ என்னைக் கைக்கொண்டபின்
பிறவியென்னும் கடலும்
வற்றிப் பெரும்பதமாகின்றதால்
இறவுசெய்யும் பாவக்காடு
தீக்கொளீஇவேகின்றதால்
அறிவையென்னும் அமுதவாறு
தலைப்பற்றிவாய்க் கொண்டதே.

– பெரியாழ்வார் திருமொழி 5–4–2



**கருட பஞ்சமி**
**25-07-2020**



SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 30-07-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020



திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
30-07-2020 முதல் 01-08-2020 வரை